
வெளிவந்துவிட்டது:



விலை அணா 8.

Regd. No. M. 4819 PONNI 25th March 1949

கடவுள் பதும்பாகு



விலை அணா 8.

செந்தமிழ்ப் பதிப்பகம்


பொன்னி
10.4.49
5
அணா

பொன்னி

வரி விளம்பரங்களுக்கான விகிதம்

(RATES FOR CLASSIFIED ADVTS)

தன்றியறிவிப்பு, திருமணம், தேவை, விற்பனை, இயந்திரம், முகவரி மாற்றம், பிறப்பு, புத்தகங்கள், மற்றும் வியாபாரச் சிறு விளம்பரங்கள்

வரி ஒன்றுக்கு அணு 8

4 வரிகளுக்கும் அதற்குக் குறைந்ததற்கும் ரூ 2

C/o முகவரி கொடுத்தால் திருப்பி அனுப்ப விளம்பரம் 1-க்கு அணு 8

தேவை

புதுக்கோட்டை சுற்றுச் சார்பிலுள்ள உயர்நிலைப்பள்ளிக்குப் புலவர் அல்லது வித்துவான் பட்டம் பெற்ற தமிழாசிரியர் தேவை. ஊதியம் அரசியலார் திட்டப்படி. விவரங்கட்கு: தபால் பெட்டி எண். 39 புதுக்கோட்டை

நல்ல நிலைமையிலுள்ள தமிழ் டைப்ரைட்டர் ஒன்று தேவை. டைப் அடித்த மாதிரியுடன் விலை விபரமும் எழுதுக. பொன்னி அலுவலகம், புதுக்கோட்டை

Wanted a typist with sound knowledge of official correspondence. Apply in own hand-writing stating previous experience and minimum salary required. (Non-brahmin Preferable) Please contact: S. P. C/o Ponni office, Pudukkkottai

அனுப்புங்கள்

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நடந்த சுவையான நிகழ்ச்சிகளைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள். இது சம்பந்தமாக எவ்விதக் கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது. D R. சந்திரன், 391, கீழ 4-ம் வீதி, புதுக்கோட்டை

இயந்திரம்

நல்ல நிலையில் உள்ள சிலிண்டர் பிரிண்டிங் மிஷின் சிங்கிள் டெமி அல்லது டபிள் கிரவுன் அளவில் தேவை. செந்தமிழ்ப் பதிப்பகம், புதுக்கோட்டை

திருமணம்

மாதம் 60 ரூபாய் வருமானம் உள்ள கோனர் இளைஞருக்கு ஓரளவு படித்த அழகுள்ள மணமகள் தேவை. சீர்திருத்த திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஜாதியைப்பற்றி அக்கரையில்லை. விவரங்கட்கு: சுப்பிரமணியன், 5860-61 சாந்தநாதபுரம் முதல் வீதி, புதுக்கோட்டை

விற்பனை

¾" நாகக் குழாய் கிடைக்கும். தேவையுள்ளோர் விலை விபரங்கட்கு எழுதுக. S S யூசுப் வாட்ச் கம்பெனி, கீழராஜவீதி புதுக்கோட்டை.

விற்பனையாளர் தேவை

கீழ்க்கண்ட இடங்களில் நமது "பொன்னி"க்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை பிரதி 1-க்கு ரூ. 1/- முன்பணம் கட்ட வேண்டும்.

விருத்தாசலம்
தஞ்சாவூர்
இராமநாதபுரம்
மேட்டூர் அணை
தனுஷ்கோடி
அம்பாசமுத்திரம்
இராசிபுரம்
சீர்காழி
பண்ருட்டி
அரியலூர்
சென்னிமலை

தாத்தையங்கார்ப்பேட்டையில்

பொன்னி விற்பனையாளராக

P. V. பாலசுந்தரம்

நியமிக்கப்பட்டிருக்கிறார்



பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 5

திருவள்ளுவர் ஆண்டு 1980
பங்குனித் திங்கள் 28-ம் நாள்

விலை அணு 5
10—4—49

செய்திப் பாட்டு

அழகிரி மறைந்தார்!

அழகிரி சாமியைப் பறிகொடுத்தீரே!
அந்தோ திராவிடத்தீரே!
அருமைத் திராவிடத் துரிமை விழைந்திடும்
அஞ்சா நெஞ்சர் துஞ்சா துழைத்த
அழகிரி சாமியைப் பறிகொடுத்தீரே!
அந்தோ திராவிடத்தீரே!

காச நோயினால் மாண்டார்
காசில் லாமலே மாண்டார்
தேசம் துயருற மாண்டார்
தீமை மாயத் தீர துழைத்த
அழகிரி சாமியைப் பறிகொடுத்தீரே!
அந்தோ திராவிடத்தீரே!

முரட்டுப் பிடிவாதக் காரர்
மூட நம்பிக்கைக் காரர்
வரட்டு மதவாதக் காரர்
வஞ்சக ரெல்லாம் அஞ்சிட உழைத்த
அழகிரி சாமியைப் பறிகொடுத்தீரே!
அந்தோ திராவிடத்தீரே!

சுயமரி யாதை இலங்கத்
தொண்டால் நாடு துலங்கப்
பயந்தே மடமை கலங்கப்
பட்டுக்கோட்டை வெட்டரி வாளாம்
அழகிரி சாமியைப் பறிகொடுத்தீரே!
அந்தோ திராவிடத்தீரே!

— “அம்மான்”



அட்லாண்டிக் ஒப்பந்தம்

உலகப் போக்கையே மாற்றியமைக்கும் வல்லமை

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய இரு பெரும் வல்லரசுகளின் 'ஏக போக உரிமை' ஆகியிருப்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். மற்றநாடுகள் தலைதூக்கி நிற்கின்றன என்றாலும், அவை ஒவ்வொன்றும் 'பின்பற்றும் நாடுகளாக' அமைந்திருக்கின்றனவே ஒழியத் தலைமை நாடுகளாக விளங்கவில்லை. உலகப் போர் இப்படியொரு முக்கியத் துவத்தை இந்த இரண்டு நாடுகளுக்கும் அளித்துச் சென்றிருக்கின்றது.

எனவே உலக அமைதி, இந்த இரண்டு நாடுகளின் ஒத்துழைப்பிலும், உலகப் போர், இவற்றிடையே ஏற்படும் போட்டியிலும், உண்டாகும் என்று சொல்லவேண்டியதில்லை. சென்ற போர் முடிவில், "ஐக்கிய நாடுகள் சபை'', எதிர்காலத்தில் போர்வரக்கூடாதென்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. ஐ. நா. சபையை நிறுவுவதில் ரஷ்யாவும் அமெரிக்காவும் ஒத்துழைக்கத்தான் செய்தன. எனினும் உள்ளூறப் புகைந்த வேறுபாட்டுணர்வு, ஐ. நா. சபை நடவடிக்கைகள் வெற்றியாகும்படி அனுமதிக்கவில்லை. ரஷ்யர் தீர்மானத்தை அமெரிக்கர் எதிர்ப்பதும், அமெரிக்கர் கருத்தை ரஷ்யர் எதிர்ப்பதுமாகச் சபை நடவடிக்கைகள் அல்லோலகல்லோலப் பட்டன. பெர்லின் தகராறு இரு வல்லரசுகளுக்குமிடையே நிலையான வேறுபாட்டை வளர்க்கத்தொடங்கியது. அமெரிக்கா, மார்ஷல் திட்டத்தின்மூலம் ஐரோப்பாவில் ரஷ்யாவின் ஆதிக்கத்தைத் தடுக்கத் தொடங்கியது. இவ்வாறு வளர்ந்த வேறுபாடு, அட்லாண்டிக் ஒப்பந்தத்தால் உச்சநிலையை அடைந்திருக்கிறதென்று சொல்லலாம்.

சென்ற வாரம் வாஷிங்டனில் இந்த அட்லாண்டிக் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருக்கிறது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் முதலிய பனிரெண்டு நாட்டின் பிரதிநிதிகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறார்

கள். இந்த ஒப்பந்தத்தின்படி தங்களில் எந்த நாடாவது தாக்கப்பட்டால் எல்லா நாடுகளும் தாக்கப்பட்டதாகக் கருதி நடவடிக்கை எடுக்க இப் பனிரெண்டு நாடுகளும் உறுதிகொண்டிருக்கின்றன. இப் பகுதிதான் ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம். எதிர்பார்த்ததுபோல ரஷ்யா, சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு மறுப்புக் குறிப்புகள் அனுப்பியிருக்கிறது; போருக்கு ஆயத்தம் செய்யும் நடவடிக்கையே இது என்று, மாஸ்கோ ரேடியோ குற்றம் சாட்டியிருக்கிறது.

ரஷ்யா ஒப்பந்தத்தை எப்படிக் கருதி நடவடிக்கை எடுக்கும் என்பதைப் பொறுத்து மேல் நடவடிக்கைகள் இருக்குமென எதிர்பார்க்கலாம்; உடனே உலகப்போர் வருவது நிச்சயமோ, நிச்சயமில்லையோ, ஐ. நா. சபைக்கு சமாதி எழுப்பப்பட்டுவிட்டது என்பதுமட்டும் என்னவோ திண்ணமாயிற்று. பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி பெவின் அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்போது "உண்மையான ஐ. நா. வை. அமைக்க முயல்வோம்" என்று கூறியிருப்பதும் இதனை நன்கு தெளிவுபடுத்துகிறது. ஆகவே, பெயரளவில் ரஷ்யாவையும், அமெரிக்காவையும் இணைத்திருந்த ஐ. நா. சபை எடுத்துமூடப்பட்டுவிட்டது. பழைய சர்வதேச சங்கத்திற்கு நேர்ந்த கதி இந்த ஐ. நா. சபைக்கும் ஏற்பட்டதில் வியப்பொன்றுமில்லை.

இம் மாறுதல்கள் உலக வல்லரசுகளிடையே ஆதிக்க வெறி குறையவில்லையென்பதையும், 'தலைமை ஆசை' இன்னும் துளிர்விட்டுக்கொண்டு தானிருக்கின்றதென்றதென்பதையுமே காட்டுகின்றன. இந்நிலையில் இந்தியா எந்தக் குழுவிலும் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளாமலிருப்பது அவசியமாகிறது. அட்லாண்டிக் ஒப்பந்தத்தை அடுத்துப் பசிபிக் ஒப்பந்தம் கையெழுத்தாகுமென்றும், அதில் ஆஸ்திரேலியா இந்தியா முதலிய நாடுகள் சேர நேருமென்றும் செய்திகள் வந்தன. ஆனால் இந்திய முதலமைச்சர் நேரு, இந்தியா எவ்விதத்திலும் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளாது என்று குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. எனினும் காமன்வெல்த் உறவு வகையில் சில பொறுப்புகள் ஏற்படலாம்; ஒருவருக்கொருவர் உதவிகள் செய்ய நேரிடலாம். இதனையெல்லாம் நன்கு ஆராய்ந்து இந்தியா தனித்து நிற்பதே இந்தியாவிற்கும் உலக அமைதிக்கும் நன்மை பயப்பதாகும் என்று கூற விரும்புகிறோம். அப்போதுதான் ஆதிக்கப்போட்டியைத் தவிர்ப்பதிலும் இந்தியா தன் பங்கை நிறைவேற்றிவைக்க முடியும்.

வம்பு மடம்

-ஆண்டி-

அலகாபாத்தினின்றும் காங்கிரஸ் தலைவர் பெங்களூருக்கு அனுப்பிய ரயில் பார்சல் ஒன்று 22 மாதம் கழித்துக் கிடைத்ததாம்! எப்படி இருக்கிறது நம் இந்திய ரயில்வே நிர்வாகமென்று நீங்கள் உடனே கேலி பேச ஆரம்பித்து விடாதீர்கள்! 22 மாதத்திற்குப் பிறகாவது ரயில்வேக்காரர்கள் பார்சலைச் சேர்ப்பித்தார்களே! 'தொலைந்து போய்விட்டது' என்று குறிப்பிட்டு விடாமல். அது வரைக்கும் அவர்களை எவ்வளவோ பாராட்ட வேண்டும்! நம் தபாலாபீஸ்களில் போடுகின்ற கடிதங்கள், புத்தகங்கள், பத்திரிகைகள் எல்லாம் ஒழுங்காய்ப் போய்ச் சேருகின்றனவா என்றால் சந்தேகந்தான்! எத்தனை கடிதங்கள், கிடைக்காமலே போய் விடுகின்றன. இப்படி நேராமல் போட்ட கடிதம் போய்ச் சேருவதற்கும், அனுப்பிய பார்சல் உரியவருக்குக் கிடைப்பதற்கும் ஆவன செய்யுமாறு நம் ரயில் மந்திரியாரை வேண்டுகிறோம். அப்படியின்றி, சென்னைப்பெருமாள் கோவிலொன்றில் மழை பெய்வதற்காக 'ஸ்ரீ ராமயக்ஞம்' நடத்துவது போல,' 'தபால்யக்ஞம்' 'ரயில்யக்ஞம்' வேண்டுமானாலும் நடத்தலாம். 'ஸ்ரீ ராமயக்ஞத்தில்' 108 தங்கத் தாலிகள் 108 'தங்கப் பாதரட்சைகள் செய்து வைப்பது போல, கார்டு, கவர்களையும் தங்கத்தில் செய்து வைக்கலாம்; மாடல் ரயில் வண்டிகள் தங்கத்தில் செய்து பூசை செய்யலாம்! மழைப் பிரார்த்தனை முடிந்ததும் சென்னை பக்தர்கள் டில்லி நோக்கிச் சென்று நாம் மேற்குறிப்பிட்டவாறு தபால் ரயில்யக்ஞங்களை ஆரம்பிப்பார்களென்று பக்த கோடிகள் சங்கச், சார்பாக நாம் விண்ணப் பித்துக் கொள்கிறோம்.

சென்னை மந்திரி சபையில் மாறுதல் காமராஜர் திருவருளால் நிகழ்ந்திருக்கிறது. கனம் ஓமாந்தூராருக்கு அன்னாரின் 'அனுக்கிரக காலம்' தீர்ந்து போனபடியால், காங்கிரஸ் கட்சித் தலைவராகக் கனம் குமாரசாமி ராஜா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். நம் மாகாண கவர்னர் பவநகர் மகாராஜா. நம் புதுப்பிரதமர் குமாரசாமி ராஜா. இவ்வகையில் 'ராஜதிருப்தி' அடையலாம். ஓமாந்தூரார் பதவியை விட்டுப்போக வேண்டுமென்பதில் ஒன்றுபட்டிருந்த பிரகாசம், காமராஜ் கோஷ்டியினர். அவருக்கடுத்தபடி புதுத்தலைவர் தேர்ந்தெடுப்பதில் ஒன்றுபட்டிருக்கவில்லை; டாக்டர் சுப்பராயன் போட்டி யிட்டுத் தோல்வியை மடியில் வாங்கிக்கொண்டார்! ஓமாந்தூரார் மந்திரிசபை மீது காமராஜருக்குள்ள கோபம் தவிர்த்துப் பார்ப்பனத் தோழர்களுக்கு வேறு சில காரணங்கட்காக அவர்மீது ஆத்திரம் இருந்து வந்தது; அந்த ஆத்திரத்தைத் தலைவர் தேர்தல் சந்தர்ப்பத்தில் காட்டித் தீர்த்துக்கொண்டார்கள்; பத்திரிகையில் ஓமாந்தூரார் ஆட்சியின் 'தோல்வி'யை எழுதிக்காட்டினார்கள் மறைமுகமாக என்னென்ன தந்திரங்களோ செய்தார்கள்! ஆகவே எல்லாச் சந்தர்ப்பங்களும் ஒன்று கூடவே ஓமாந்தூரார் "பிரதமர் பதவி, கட்சித்தலைவர் பதவி யெல்லாம் வானத்தில் மிதக்கும் மேகங்கட்குச் சமம்" என்று குறிப்பிட்டு விட்டு விலகும்படி நேர்ந்தது. இரண்டு ஆண்டு ஆட்சியில் ஓமாந்தூரார் பொது மக்களின் அன்புக்குப் பாத்திரமாக முயன்ற அளவுக்குத் தம் நண்பர் காமராஜருடைய அன்பைப்பெறவோ, எம். எல். ஏ. க்களின் அன்பைப் பெறவோ முயற்சிக்கவில்லை என்பது மட்டும் என்னவோ உண்மையாகும்.

கட்சித் தலைவர் தேர்தல் வந்தது. எம். எல். ஏ.க்கள் தங்களுக்குள்ள 'பலத்தை'க் காட்டி வஞ்சம் தீர்த்துக் கொண்டார்கள்! பாவம் சென்னை மக்களின் அன்பு ஓமாந்தூராருக்கு இச் சமயத்தில் என்ன செய்ய முடிந்தது? புதுப் பிரதமர் ஓமாந்தூராரின் அனுபவங்களிலிருந்து பல பாடங்களைக் கற்றுக்கொள்வார் என்று நாம் நம்பலாம்.

கேவலம்! பதவி ஆசைதானே இத்தனை போட்டிகளுக்கும் தகராறுகளுக்கும் காரணமாய் இருக்கிறது! காங்கிரஸ்காரர்கள் தங்களை அறியாமலே பதவி ஆசைபிடித்தவர்களாக மாறிவிட்டதுதான் இப்போதுள்ள பரிதாப நிலை. இரும்பு மனிதர் தம் காங்கிரஸ் தோழர்களுக்குப் பின்வரும் யோசனைகளைக் கூறியுள்ளார்:

"காங்கிரஸ்காரர்கள் அதிகாரத்திற்குப் பேராசைப் படக்கூடாது. திறனும், தகுதியும் உடையவர்கள் தங்களுக்குரியதைப் பெறுவர். அதற்கு நாம் பரிசுத்தமான நெஞ்சும், சுத்தமான நாக்கு, கை, சரியான கண்களும் உடையவர்களாக இருக்க வேண்டும்"

இப் பொன்னுரையின்படி நம் மாகாணத்தில் ஓமாந்தூராரல்லவா பிரதமராக நீடித்திருக்க வேண்டும்? அப்படி நிகழவில்லையே! பரிசுத்தமான நெஞ்சம், சுத்தமான கை பதவியினின்றும் வெளியேறும் நிலையை நம் அருமைக் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் ஏற்படுத்தி விட்டார்களே! அடுத்த அடுத்த ஆண்டுகளிலேனும் படேலின் புத்திமதி பயன் தருமென நம்புகிறோம்.

இச் சந்தர்ப்பத்தில் அஸ்ஸாம் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் அறிக்கையொன்று நம் நினைவிற்கு வருகிறது. நிகழப் போகும் தேசிய வாரக் கொண்டாட்டத்தில் ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் "நான் லஞ்சம் வாங்க மாட்டேன், கள்ள மார்க்கட் செய்யமாட்டேன்; அதற்கு உடந்தையாயிருக்கமாட்டேன்" என்று உறுதி எடுத்துக்கொள்ள வேண்டுமாம்! எப்படி இருக்கிறது கூத்து! பரிசுத்தமான கையைத் தேடியல்லவோ செல்ல வேண்டி வந்துவிட்டது!

பவநகர் நமக்கு ஒரு கவர்னரை மட்டும் அளிக்கவில்லை; நம் மாகாணத்தின் முன்னேற்றத்தில் அச் சமஸ்தானத்திற்கு எவ்வளவு அக்கறை! நல்ல காளைகளும், பசுமாடுகளும் பவநகரிலிருந்து சென்னைக்கு வரப் போவதாகச் செய்தியொன்று கூறுகிறது! நல்ல ஏற்பாடுதான்!



காலமும் கருத்தும்

குறள் நாள்

இம்மாதம் 12-ம்நாள் தமிழ் நாடெங்கும "குறள் நாள்" கொண்டாடப்பட வேண்டுமென்று தலைவர் பெரியார் அறிக்கைவிடுத்திருக்கிறார்கள்; தமிழ் மக்களின் முன்னேற்றமும, வெற்றியும் குறள் நெறி நாட்டில் பரவுவதைப் பொறுத்திருக்கிறது என்பதை நன்குணர்ந்து கொண்ட திராவிடக் கழகத்தினர் வள்ளுவர் வாக்கினைப் பரப்பும் பணியில் ஈடுபட வேண்டியது மிக இன்றியமையாததாகும். ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ் மகளும் குறளை படித்த நிலை வருமவரை சலிப்பு வரக்கூடாது. அம்முறையில் தமிழகம் முழுமையும் குறளை ஏற்கும் நாள் விரைந்து வரும் வகையில் சென்னையிலும், அண்மையில் விருதுநகரிலும் கூடிய குறள் மாநாடுகள் சிலநல்லமுடிவுகளை நிறைவேற்றியிருக்கின்றன. அவற்றில் முதல் உயர் நிலை வகுப்பு தொடங்கி பி. ஏ. வகுப்பு முடியக் குறளை முற்றும் மாணவர்கள் படித்துவிடும வகையில் பாடத் திட்டம வகுக்குமாறும், திருக்குறளுக்கென, ஷேக்ஷ்பியர்போலத் தனி வினாத்தாள ஏற்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ள தீர்மானமும், வள்ளுவர் விழா நாள் விடுமுறைக் கோரிக்கையும் குறிப்பிடத் தக்கவை. நாடெங்கும் வரும் ஏப்ரல் 12ம் நாளில் வள்ளுவர் வாய்மை நெறி முழங்குமென எதிர்பார்க்கிறோம்

வாட்டரோலியம்

கடல் நீரிலிருந்து பெட்ரோல் தயாரிக்கலாமென்பதை பக்தவத்சலரெட்டி என்பவர் கண்டுபிடித்திருப்பதாகப் பத்திரிகையில் செய்திகள் வருகின்றன. அதனை 'வாட்டரோலியம்' என்று அழைக்கிறார்கள். அதனை ஊற்றிக் காரை ஓட்டிக் காட்டியிருக்கிறார் அந்த அன்பர். ஆனால் பத்திரிகைகளும், சென்னை அரசாங்கமும் இந்த ஆராய்ச்சியில் அவ்வளவு அக்கரை காட்டவில்லை; அதற்கு மாறாகப் பக்தவத்சல ரெட்டியின் சாதனையில் ஐயப்படுகிறார்கள். அரசாங்கம் உறுதி கூறினால் தயாரிக்கும் விதத்தைத் தெரியப்படுத்துவதாக அவர்கூறுகிறார். ஆகவே அவர் கூற்றைப் புறக்கணிக்காது, அதிகாரிகள் வாட்டரோலியம் ஆராய்ச்சியைப்பற்றி ஒரு முடிவுக்கு வருவார்களென்று நம்புகிறோம். 'வாட்டரோலியம்' பக்தவத்சல ரெட்டியின் கற்பனையென்று நிரூபிக்



கப்பட்டு விட்டால் யாருக்கும் எவ்வித நஷ்டமுமில்லை. ஆனால் உண்மையிலேயே 'வாட்டரோலியம்' தயாரிப்பது சாத்தியமென்று காணப்பட்டால் உலகத்திற்கே எவ்வளவு பயன் அதனால் ஏற்படும். இதனை எண்ணியாவது சென்னை அரசாங்கம் 'வாட்டரோலியம்'பற்றி அக்கரை செலுத்த வேண்டுகிறோம்.

இந்து சட்டத் தொகுப்பு

டாக்டர் அம்பேத்காரின் அரிய முயற்சியின் பயனாக இந்தியா பார்லிமெண்டில் வந்துள்ள இந்துசட்டத்தொகுப்பு மசோதா நிறைவேறுவதில் வீணாகக் காலங் கடத்தப்படுகிறது. நாஸிருத்தீன் அகமத் என்ற முஸ்லீம் தோழர் இம்மசோதாவை எதிர்த்து ஆறு மணி நேரம் பேசியிருக்கிறார். இந்துக்கள் முன்னேற்றத்தில் அவருக்கு ஏன் அவ்வளவு வெறுப்போ தெரியவில்லை. மற்றும் பல விதண்டாவாதக்காரர்கள் 'பெருங் கூச்சல்' போட்டு மசோதா சட்டமாகாமல் தடுத்து வருகின்றனர். டாக்டர் பட்டாபி சீதாராமையாவே இம் மசோதாவிற்கு எதிர்ப்புக் காட்டியிருக்கும் போது பிற்போக்கு சக்திகளின் பலம் கூடியிருக்கிறதென்பதை நாம் கூறவேண்டியதில்லை. இம்முறையில் இத்தடவை கூடியுள்ள கூட்டத்திலும் இம் மசோதா நிறைவேறாது என்று தெரிகிறது. டாக்டர் அம்பேத்காரும் மற்ற அமைச்சர்களும் இக் 'காட்டுக் கூச்சலுக்'காக அஞ்சுவது பேதமை என்பதைக் கூற விரும்புகிறோம்.



சென்னை, சர்க்கார் உத்தியோகத்திற்கு இந்திப் பயிற்சி அவசியமெனச் செய்யப்போவதாக முன்னாள் பிரதமர் அண்மையில் குறிப்பிட்டார்.

கட்சித் தலைவர் சர்க்கஸ்!



சிலப்பதிகாரக் காட்சிகள்

விசு. திருநாவுக்கரசு

5. மாதவி காதற் கடிதம்

கடற் கரையிலே காதலனை விட்டுப்பிரிந்த மாதவி துன்பமும் தானுமாய் தன் இல்லம் புகுந்தாள். இளவேனிற்காலம் தொடங்கி விட்டது. நீர் நிலைகளிலும் வாவிகளிலும் செந்தாமரைகள் இதழ்விரிந்து மலர்ந்தன. மாமரங்கள் பசுங் கொழுந்து விட்டுத்தளிர்த்தன. அழகு குடிபுகுந்த அசோக மரத்திலே இதழ்கள் விரிந்தன. பூங்கொடிகள் பூமணம் பரப்பின. தென்றல் கூறிய காதற் கவிகளைப் பூங்குயில்கள் புகழ்ந்து மகிழ்ந்து பாடின. கூடிய காதலர் தம்மை மறந்தனர். ஊடிய காதலர் வருந்தினர்.

கோவலனைப் பிரிந்து வந்த துன்பம் புகுந்தது. நேரம் செல்லச்செல்ல நீண்ட உருவம் எடுத்தது. துன்பம் வெப்பமாய்ப்பரவி உடலை வருத்தியது. அதைத் தணிக்கப் பொதிகை மலையிலே பிறந்த சந்தனம், தென் கடலிலே எடுத்த முத்து இரண்டையும் மாதவி தன மார்பிலே அணிந்தாள். சகோடயாழை ஏந்தினாள். பாடினாள். மருதப் பண். மீட்டினாள்.



இவை ஒன்றும் உடலிலும் உள்ளத்திலும் ஏற்பட்ட துன்பத்தைத் துடைக்க முடியவில்லை காலையும் மாலையும் காதலனை எதிர் பார்த்து எதிர் பார்த்து அயர்ந்து போகிறாள். கோவலனுக்குக் கடிதமொன்று எழுத எண்ணினாள். தன்னருமைத் தோழி வசந்தமாலை

யிடம் தானெழுதும் கடிதத்தை அனுப்ப நினைத்தாள். மாதவி தன் காதலனுக்கு எழுதும் முதற் கடிதம் இதுவே. அவள் எழுதும் வாசகமும் எழுதப் படும பொருளும், சார்பான பிறவும் அவளது காதலுணர்வைக் கோவலனுக்குத் தெளி வாய்க்காட்ட வேண்டும். அதே சமயத்தில் அவன் உள்ளத்தி லும் அவ்வுணர்வை எழுப்ப வேண்டும். தான் செய்த குற்றம் அவ்வெண்ணத்தால் முற்றிலும் மறைந்து போகவும் வேண்டும். இவை அனைத்தாலும் அவன் உடனே தன்னை வந்து கண்டு மகிழவேண்டும். இத்தகைய எண்ணங்கள் தோன்றிய மாதவி சண்பகம், குருக்கத்தி, பச்சிலை, கருமுகை, வெண்பூ, மல்லிகை, செங்கழுநீர் ஆகிய மலர் தளிர் நிறைந்த மாலையைக் கட்டுகிருள்.

முதிர்ந்த தாழம்பூவின் வெண்மயமான இதழாகிய கடிதத்திலே, பித்திகை அரும்பாகிய எழுதுகோலை, செம்பஞ்சுக் குழம்பாகிய மையிலே தோய்த்து முத்து முத்தாய் எழுதுகிருள்.

மன்னுயிர் எல்லாம் மகிழ்துணை
புணர்க்கும்
இன்னிள வேனில் இளவர
சாளன்
அந்திப் போதகத்து அரும்பிடர்த்
தோன்றிய
திங்கட் செல்வனும் செவ்வியன்
அல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப்
படினும்
தணந்த மாக்கள் தந்துணை
மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர்
கோடல்
இறும்பூது அன்று இஃதறிந்
தீமின்!

"காதலரை மகிழ்விக்கும் இளவேனில் வந்தது. பொழுது சாய்ந்து வரும் நேரத்திலே காதலனைப் பிரிந்த காதலியும் காதலியைப் பிரிந்த காதலனும் காதலால் மெலிவர். அப்போது வானத்தில் மிதந்து வரும் வெண்ணிலாவும் துன்பத்தை மிகுதியாக்கும். கூடினோர் ஊடினுலும், பிரிந்தவர் மறந்தாலும் மலர் அம்புதூவி அவர் உயிரை வருத்துவான். இதனை நீங்கள் அறிய வேண்டும்."

இதுதான் மாதவி எழுதிய கடிதம். தேனும் பாலும் போன்ற மழலை மொழிகளால் பலகால் சொல்லிச் சொல்லி எழுதினுள்—இல்லை, தன் உள்ளத்தையே வடித்தாள்.

மாதவி காதல் வயப்பட்டு எழுதிய எழுத்திலே, அதைத் தாங்கிவரும் தாழை மடலிலே, அதைக் கவர்ந்து கொண்ட மலர் மாலையிலே—அத்தனையிலும் காதல் மணக்கிறது; காதல் தேன் சொட்டுகிறது!

அவள் எழுதிய கடிதத்தைப் பாருங்கள். வெணணிறமான இதழ்; கூர்மையான அரும்பு; செந்நிறமான குழம்பு— காதலை நாகரிகமாய், நுணுக்கமாய்க் காட்ட இதனினும சிறந்த கருவிகளும உண்டோ?

நம் முன்னோர் காதலரை ஒன்றுபடுத்தும் நிகழ்ச்சிக்கு மணம் என்றனர். மணத்தை

மலரிட மிருந்து பெறுவது போல் இன்பத்தை ஒருவர் மற்றொருவரிடமிருந்து பெறுகின்றனர். அதைக் கூட்டுவிக்கும் பொருளும் மலராய், அது பரப்பும் மணமாய் அமைந்து விடுமானால் அதைத் தெரிந்தெடுத்த அறிவுக்கு நாம் எதை ஒப்பிடுவது!

மாதவி தானெழுதிய கடிதத்தில் கோவலனை வருக எனப் பச்சையாய் எழுதினாளில்லை. காலத்தைக் காட்டினாள், அக்காலம் கொள்ளுகின்ற கோலத்தைக் கூறினாள். இதை நீ அறிக என்றாள். எவ்வளவு நாகரிகமாய்த் தன் உள்ளத்தைக் காட்டியிருக்கிறாள்.

இத்தகைய காதற் கடிதத்தை எழுதி வசந்தமாலையிடம் கொடுத்துக் கோவலனை அழைத்துவருமாறு கூறினாள். அவ்வாறே வசந்தமாலை கோவலனை வாணிக வீதியிலே கண்டு கடிதத்தைக் கொடுக்கிறாள். வாங்கிய கோவலன் மாதவிமுன்னாளில் தன்னோடு இணங்கியும் பிணங்கியும் நிகழ்ந்த செயல்களை எல்லாம் நினைத்துப் பார்க்கிறான். அவனது மனமாகிய நாடக அரங்கிலே காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாய் வருகின்றன.

புயல் போல் எழுந்தகூந்தல், வில் போல் வளைந்த புருவம், அதன் கீழ் நீல மலர் போல் விரிந்த கண்கள், கொவ்வைக் கனிபோல் சிவந்த திருவாய் — இவை நிலவும் காதல் முகம், கோவலனிடத்தில் காதல் காட்டியது. பவளச் செப்பிலே பாகு அமைந்ததுபோல் அவள் வாயிலே அமைந்த சொற்கள் இனிமையாயின.



நண்பர்:- ரேஷன் கார்டுகளை எல்லாம் பைண்டு செய்யறாப் போலே இருக்கு!
புதிசாக் காய்கறி, உப்பு, முதலியவற்றிக்கும் ரேஷன்கார்டுகள் வந்தா என்ன செய்வீர்?

வீட்டுக்காரர்:- அவற்றை யெல்லாம் தனியே பைண்டு செய்து "ரேஷன் வால்யூம் — இரண்டாம் பாகம்" என்று போட்டாப் போகுது!

அந்தப்பவளச் செப்பிலே வரிசையாய் அமைந்த முத்துப் பற்களால் நகை முகம் காட்டி வருக என அழைக்கிறாள், மாதவி.

பாகுபொதி பவளந்திறந்து
நிலா உதவிய
நாகிள முத்தின்
நகைநலங் காட்டி
வருகென வந்து
போகெனப் போகிய
கருநெடுங் கண்ணி

அவன் மனத்திலே முதலில் தோன்றுகிறாள். அந்தி மாலை வந்த சமயத்தில் கோவலன் உள்ளத்தில் சிந்தை நோய் பெருகியது. கிளிபோலப் பேசு

தலையும் அன்ன நடையையும் மயிலின் சாயலையும் மறைத்துக் கொண்டு தனியளாய்த் தன்னை வந்து கண்ட காட்சியை எண்ணுகிருன்.

இங்ஙனம் பலவாறு நாடக மகள் என்பதற்கேற்பத் தன்னிடமே நடித்துக் காட்டியது அவள் இயல்புக்கு எவ்வாற்ருனும் பொருந்துமென எண்ணி மாதவியின் காதற் கடிதத்தை ஏற்காது மறுத்து விடுகிருன். மாலையும் வாடியது; தோழி வசந்தமாலையின் மனமும் வாடியது.

செயலற்ற உள்ளத்தோடு மாதவியை வந்தடைந்த வசந்தமாலை நிகழ்ந்தன கூறினுள். மாதவிக்கோ துன்பத்தின் மேல் துன்பமாயிற்று ஆசை வெட்கமறியாது என்பது போல அவர் மனந்திரும்பி வருவர் என ஆசை மனம் ஊசலாடியது.

மாலை வாரா ராயினும்
மாணிழை
காலை காண்குவமெனக்
கையது நெஞ்சமொடு
பூமலர் அமளிமிசைப்
பொருந்தாது வதிந்தனள்
மாமலர் நெடுங்கண்
மாதவி தானென்

மாலைப்பொழுதினிலே அவர் வராவிட்டாலும், காலையிலே வருவார் என்ற சொற்கள் மாதவியிடமிருந்து வந்தன. மாதவியின் உள்ளத்திலே பெருகிய சோகம் வெளியிலும் இருள் வடிவமெடுத்து வந்தது. பூமலர்ப் படுக்கையிலே புரண்டு படுக்கிருள். ஆருத துன்பம்: மாருத எண்ணம். ○

ட்ரூமன்-ஸ்டாலின் சந்திப்பு



ட்ரூமன் ஸ்டாலின் சந்திப்பு நிகழாவிட்டாலும், ஒருவர் நினைவில் மற்றவர் எப்பொழுதும் இருந்துகொண்டே இருக்கிருர் என்பதைப் படம் காட்டுகிறது.

பத்துமாதம் சுமந்துபெற்ற பிள்ளையிடம் பாசம் இன்னும் நூறுமடங்கு அதிகமாகத்தானிருக்கும். இருந்தது. ஆனால் அவள் ஏன் குழந்தையை மணலிற் போட்டு மூடிவிட்டு ஓடினாள். பின் எதற்காக யாருக்காக அவள் பயந்தாள்?

எழுதியவர்:
"உதயம்"

இரண்டு ★ ★ காட்சிகள்

காரை எடுத்துக்கொண்டு கிராமத்துக்குப் போனோம். கார் வெகு வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது.

திடீரென்று அங்குப் படுத்துக்கிடந்தநாய் எங்கள்காரைக் கண்டவுடன் குரைக்க ஆரம்பித்தது. எங்கள்காரைத் துரத்திக்கொண்டே ஓடிவந்தது. காருக்கு முன்பு பாய்ந்து சென்று 'லொள் லொள்' ளென்று குரைத்தது. எங்களுக்கெல்லாம்கூடச் சற்றுப் பயம்தான், அந்த நாய் காரில் எங்கேயாவது மாட்டிக்கொள்ளப் போகிறதோ என்று. எங்கள் காருடன் கொஞ்சதூரம் அதுவும் நாலுகால் பாய்ச்சலில் ஓடிவந்தது.

எதிரே ஒரு காப்பி கிளப் தென்படவே நாங்கள் காரை நிறுத்தினோம். நாங்கள் இறங்கியவுடன் நாய் இன்னும் வேகமாக ஏக வசனத்தில் திட்டுபவன் போலத் தலையை உயரத் தூக்கிக்கொண்டு குரைக்க ஆரம்பித்தது.

நாங்கள் கிளப்பில் உட்கார்ந்தோம். நாய் சும்மா இருக்கவில்லை. சற்று நேரம் காரைச் சுற்றிச் சுற்றி ஓடிவந்தது. பிறகு தனது முன்னங் கால்களை டயரின்மீது வைத்துக்கொண்டு கடிக்க ஆரம்பித்தது.

பாவம்! அதன் வாய்க்கு ஒன்றும் அகப்படவில்லை.

"நாய்களுக்கே மூளை இல்லை சார்! கார் என்ன பேயா, பிசாசா இல்லை திருடனா? ஏன் இப்படிக் காரைக் கண்டவுடன் துரத்துகிறது. அதைப் பாருங்களேன்! டயரைக் கிழித்துவிடப் போவதாக எண்ணிக் கொண்டல்லவோ அது கடிக்கிறது" என்றேன்.

"அது என்னத்தை சார் கண்டது" என்றார் என் நண்பர்.

"அப்படிச் சொல்லாதீங்க. இது ரொம்ப அறிவுள்ள

நாயுங்க. இது கதையே ஒரு பெரிய சோகக் கதைங்க" என்றார் கிளப்பில் உட்கார்ந்திருந்த ஒருவர். அவர் முகத்திலே வருத்தத்தின் சாயல் தென்பட்டது.

"அப்படி என்னுங்க அது" என்றோம் நாங்கள்.

"இந்த நாய் முதல் தடவையா இப்பத் தாங்க குட்டி போட்டுது. போட்ட மூணு குட்டியிலே இரண்டு அப்பவே செத்துப் போய்ட்டுது. ஒரு குட்டி மாத்திரம் கறுப்பும் வெள்ளையுமா ரொம்ப அழகா இருந்துதுங்க. இந்த நாய் அந்தக் குட்டியோடே படுத்துக்கிட்டிருக்கும்போது ஒருத்தருமே கிட்ட அண்டமுடியாதுங்க. அந்தக் குட்டிமேலே இது உசிரைத்தானுங்க வைச்சிருந்தது.

"ஒருநாள், இந்தப் பெரிய நாய், எங்கேயோ இலை எறிந்த சத்தம் கேட்டு அங்கே ஓடிப் போச்சு. அந்தச் சின்னக்குட்டி மாத்திரம் தனியாப் படுத்திருந்துது, அப்ப ஒரு பச்சைக்கார் ரொம்ப வேகமா வந்து துபாருங்க, ஒரு நாய்க்குட்டி படுத்திருக்கேண்ணு கூடப் பார்க்காமல் அரைச்சுட்டுப் போய்ட்டானுங்க அந்தப் பாவிப் பயல்.

"இந்தப் பெரிய நாய், ஓடியாந்து பாத்துது. ரோடு பூராவும் ஒரே ரெத்தமாகக் கிடந்துது. குட்டியைச் சுத்திச் சுத்தி ஓடியாந்து மோந்து மோந்து பார்த்து அப்படியே 'ஒ'ன்னு அழுதுப்புட்டுதுங்க, அதிலேயிருந்து எந்தக் காரு போனாலும் இந்த நாய் உடறதே இல்லேங்க. துரத்து துரத்துன்னு துரத்தும். டயரைப் போயி கடிக்கும், அதுவும் இந்த மாதிரிப் பச்சைக் காரைக் கண்டுட்டுதோ அதுக்கு ரொம்பக் கோபம் வந்துடுங்க. வாயில்லாச் சீவன்! அது என்னங்க செய்யும். ரொம்பப் பரிதாபமுங்க இது கதை" என்றார். அவர் கண்களிலே கண்ணீர் காணப்பட்டது. எங்களுக்குக்கூட ரொம்ப வருத்தமாயிருந்தது.

"இந்தக் குட்டிதான் என் உலகம்" என்றிருந்த அந்த நாயின் எண்ணத்திலே மண் விழுந்தால் அது வருத்தப்படாதா? அதற்குக் கோபம் வராதா?

ஃ ஃ ஃ

நல்லகாரிருள். ஆள் நடமாடுவதே தெரியாத அப்படிப் பட்ட இருள். அந்த இருபது வயதுப் பெண் வேகமாகக் காவேரி நதியை நோக்கிநடக்க ஆரம்பித்தாள். பயந்து கொண்டே போனாள், யாராவது பார்த்துவிடப் போகிறார்களோ என்று. நடப்பதற்கு அவளுக்குச் சிரமமாயிருந்தது. ஆனால் நடந்தாக வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் நடந்தாள். அவள் மனத்திலே அலை அலையாக எண்ணங்கள் எழுந்தன. மனதிலே பெரிய போராட்டம் நடந்துகொண்டிருந்தது. நடு நடுவே மடியில் அணைத்திருக்கும் அருமைக் குழந்தையின் 'குவா குவா' வென்ற சத்தம். எங்கே, யாராவது விழித்துக்கொண்டு

விடப் போகிறூர்களோ என்று முந்தானைத் தலைப்பைப்போட்டு அதன் வாயை மூடி, தோளில் போட்டுக்கொண்டு தட்டிக் கொடுத்தாள். இன்னும கூப்பிடு தூரம்தான் காவேரிக் கரை. பெரிய இலட்சியத்தை நோக்கி முன்னேறுபவள் போலப் போய்க்கொண்டேயிருந்தாள்.

காவேரியின் வெள்ளை வெளேரென்றிருந்த மணற்பரப்பு அவளுக்கு ஆறுதலைத் தந்தது. நடுக் காவேரிக்கு வந்தாள் சுற்றுமுற்றும் பார்த்தாள. ஆளரவமே கிடையாது. மடியிலிருந்த தன் குழந்தையை மெதுவாக மணற் பரப்பிலே கிடத்தினாள், வெகு அவசரமாகத் தன் இரு கைகளாலும் அங்கே ஒரு குழிதோண்ட ஆரம்பித்தாள். என்ன, இந்த இரவிலே காவேரிக் கரையிலே குழி தோண்டி விளையாடுகிறாளா, இல்லை தான் புதைத்துவிட்டுப்போன புதையலை ஒருவேளை தேடுகிறாளோ?

அவளையறியாமலே அவள் கண்கள் கண்ணீரைக் கக்க ஆரம்பித்துவிட்டன. சிறிது நேரம் அப்படியே அழுது கொண்டே உட்கார்ந்திருந்தாள். எங்கேயோ ஒரு பறவை 'கீச் கீச்' சென்று கத்தியது, இன்னும் இரண்டு நாழிகை தான் இருக்கிறது பொழுது விடிய, என்பதை அறிவிப்பது போல. அவள் அதற்குமேலும் சும்மாயிருக்க முடியுமா?

தன் புடவைத் தலைப்பைப் பிடித்தாள். 'சரக்'கென்றுகிழித்தாள். தனது அருமைக்குழந்தையை அந்த மணற் பரப்பாகிய அந்தப் பள்ளத்திலே மெதுவாக வைத்தாள். நடுங்கும் கைகளினால் அதன்மேல் தன் புடவைத் துணியைப் போட்டாள். அதன் மேலே இரண்டுபிடி மண்ணை அள்ளி லேசாகப் போட்டாள்.

ஐயோ! அவளால் அதற்கு மேலும் சகிக்க முடியவில்லை. இந்த அநியாயத்தை அவள் செய்யும் துரோகத்தை அவளால் எண்ணாமல் இருக்க முடியவில்லை. "பெற்ற என் கையினாலேயே உனக்கு ஒரு பிடிமண்ணைப் போடுகிறேனே என்று புலம்பினாள். குழந்தை நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தது. "ஐயோ! என் குழந்தை நாளைக்குப் பெரியவனாய் வளர்ந்து என்னைப் பற்றிக் கேள்விப்பட்டால் என்ன நினைப்பான். 'அவள் என் தாயா? இரக்கமற்ற பேய்' என்றல்லவா எண்ணுவான் என்று நினைத்தாள். 'கண்ணே' என்று வாய்விட்டுக் கதறினாள். மண்ணிலேயே புரண்டாள் சற்று நேரம். எங்கோகேட்டது பேச்சரவம். அவள் அதற்கு மேலும் நிற்கவில்லை. தன்னை ஒருவாறாகத் தேற்றிக்கொண்டு 'கடவுளே! என் குழந்தையை உன் கையில் தான் ஒப்படைக்கிறேன்" என்று கூறினாள். "நான் பாவி துரதிர்ஷ்டசாலி! என் கண்ணே என்னை மன்னித்து விடு" என்று சொன்னாள். அவள் அழுதகண்ணீர் காவேரி மணலோடு கலந்தது.

கொஞ்ச தூரம் சென்றாள். திரும்பிப் பார்த்தாள். அழுதாள். அழுதுகொண்டே போய்விட்டாள்.

தான் பெற்ற குழந்தையை உயிருள்ள செல்வத்தை—உயிருடனேயே காவேரி மணலில் போட்டு மூடிவிட்டுச் செல்லும் இந்தப் புண்ணியவதி யார்?

அவள் ஒரு பெண். பெண்ணாகப் பிறந்தது அவள் பிசகு! கண்நிறைந்த கணவனுக்கு வாழ்க்கைப்படவேண்டும்; மனதுக்குப் பிடித்த மன்மதனுக்கு மாலையிட வேண்டும் என்று தான் அவளும் எண்ணினாள்.

ஆனால் அவள் வறுமை?

எந்தக் கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டாளோ, எந்த நோயாளியின் கையைப் பிடித்தாளோ எந்த துரதிருஷ்டசாலிக்குத் தோள் கொடுத்தாளோ தெரியவில்லை, அவள் விதவையாகி விட்டாள்.

அவள் அதற்காக வருந்தித் தான் பயன்? விதவையாய்ப் போய்விட்டால் வாழ்வு அத்துடன் நின்று போய்விடுகிறது?

பதினெட்டு வயது மங்கை அவள். பருவத்தின் மலர்ச்சி பாவையை ஒரு தினுசாக ஆக்கி விட்டிருந்தது; உடலிலிலே மட்டுமல்ல, உள்ளத்திலும் கூட. அவளது வண்டொத்த விழிகள் வெள்ளோட்டம் விட்டன. செங்கண்ணன் வரும் போதெல்லாம் மார்பு விம்மி வீறிட்டது. உடல் பூரித்துப் பொங்கிற்று. இன்ப வேதனையை அவள் யாரிடம் சொல்வாள்?

எந்த இன்பத்திற்காக அவள் ஏங்கிக்கிடந்தாளோ அந்த இன்பம் அன்று கிடைத்தது. இரவிலே தனியே படுத்திருக்கும் அவளுடலைத் தொடும் கை யாருடைய கை? சந்தேகமில்லை செங்கண்ணனுடைய கைதான்.

அவள் வாழ்வு புனிதமாயிற்று. வாழ்வில், பிறந்த பயனை பெற்றுவிட்டாள் அவள். இந்த இன்ப விளையாட்டுக்களெல்லாம் பின்னால் பெரிய சுமையை விட்டுவிட்டுப் போகும் என்று அப்போது கண்டாளா அப்பேதை.

மூன்றும் மாதம். அவள் வாந்தியெடுத்தாள். மசக்கை!



அண்ணன்:- அப்பா! தங்கச்சிக்கு மாமா, நாலு அறை கொடுக்கப் போனான். நான் தடுத்து ஒரு அறையோடு விட்டுட்டேனப்பா!

அப்பா:- பேஷ்! அவன் கிடக்கிறான் போக்கிரி, நீதான் நல்ல பிள்ளை.

தம்பி:- இல்லையப்பா! மாமா இரண்டணா கொடுத்தாங்க அதை அண்ணன் எடுத்துக்கிட்டு அரையணாக் கொடுத்திடுச்சு.

அன்று அவனுடன் நடத்திய இன்ப விளையாட்டு இவ்வளவு பெரிய விபரீதமாகும் என்று அவள் எதிர் பார்க்கவில்லை. "ஐயோ கடவுளே" என்று அழைத்தாள். கடவுளுக்கு என்ன வேலையோ? இதுமாதிரிக் கெட்டுப்போனவளுக்கெல்லாம் வந்து உதவி செய்யத் தான் அவர் இருக்கிறாரா?

கடவுளின் ஏகப்பிரதிநியாக வந்தான் கம்பவுண்டர் கந்தசாமி. "கரைத்து விடுகிறேன், கவலைப்படாதே கண்ணே" என்று தைரியம் சொன்னான். ஆனால் செய்தது? இந்த உலகத்தையே மறந்து விடுவான், அவளிடம் வந்து விட்டால்.

அவள் என்ன செய்வாள்? யாரிடம் போய்ச் சொல்வாள் இந்த வெட்கக் கேட்டை. மாமன் மகன் செங்கண்ணன் மீது அவளுக்கும் ஆசைதான் அவனுக்கும் ஆசைதான். ஆனால், அறுத்துப்போனவளைக் கட்டிக் கொள்ளப் போகிறேன் என்று சொன்னால் அவன் அப்பா தான் சரி என்பாரா? அல்லது ஊரார் தான் ஒத்துக் கொள்வார்களா?

ஊரை விட்டே போய்விட்டாள் அவள். பத்தாவது மாதத்தில் சுகப்பிரசவம் ஆயிற்று. ஆண் குழந்தை! கடைந்தெடுத்த தந்தப் பொம்மை போல்! 'அப்படியே அப்பாவை உரித்துக் கொண்டு வந்திருக்கிறதே' என்று ஆனந்தப்பட்டாள். ஆனால் அது யாரை அப்பா வென்று கூப்பிடும்? "அப்பா எங்கே, அம்மா?" என்று கேட்டால் என்ன சொல்வது?

விதவைக்குப் பிள்ளை பிறந்தால் ஊரார் எல்லாம் என்ன சொல்லுவார்கள்?

விதவைக்குப் பிள்ளை பிறந்தால் 'விபசாரி' என்ற பட்டம் தானே அதற்கப்புறம்?

மனிதனிலும் கீழ்ப்பட்ட மிருகத்திலும் கேடுகெட்ட இடமல்லவா அவளுக்குச் சமுதாயத்தில்.

அவளுக்குத் தன் வயிற்றைக் கழுவிக் கொள்ள ஒரு வீட்டு வேலைக்காரி வேலை கூடக் கிடைக்காதே.

நாளைக்கு ஊரிலுள்ள, அத்தனை கட்குடியர்களுக்கும் காம வெறியர்களுக்கும் அவளல்லவா பதில் சொல்ல வேண்டும்?

கேவலம், பகுத்தறிவற்ற ஒரு நாய்க்கு அதன் குட்டியிடம் எத்தனை அன்பு – பாசம் இருந்தது. ஆறறிவுள்ள அவளிடம் குழந்தையைப பெற்ற பாசமே யில்லாமற் போய் விட்டதா? 'என் உலகமே என் இன்பக்குழந்தை தான்' என்று எண்ணும் தாயன்பு இல்லாமலா போய் விடும்? பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளையிடம பாசம் இன்னும் நூறு மடங்கு அதிகமாகத் தானிருக்கும். இருந்தது. ஆனால் அவள் ஏன் குழந்தையை மணலிற் போட்டு மூடிவிட்டு ஓடினாள். பின் எதற்காக யாருக்காக அவள் பயந்தாள்? ○

பொது மேடை

தமிழ் உபாத்திமைச் சங்கம்
டர்பன் 9-3-49

இலக்கியம், கலை, அரசியல் சமயம் ஆகிய எல்லாத்துறை களிலும், சமுதாய நலமே ஒப் பற்ற நலமாகக் கொண்டும், சமுதாய உணர்வுகொண்டு மக் களும் நாடும் உயர்வுகொள்ள வேண்டி வீரச் சக்தியையும் ஊட்டி வரும் தங்கள் பொன்னி யைப் பற்றி. இந்நாட்டின் ஒப்பற்ற தமிழ்த்தொண்டர் திரு. ச. மு. பிள்ளை அவர்கள் வாயிலாக நாங்கள் நன்கறிந் துள்ளோம். இத்தகைய பொன்னியின் பொங்கல் மலரை இன்று கண்ணுற்ற நாங்கள், அதிலடங்கியுள்ள அறிஞரது பேருரைகளையும், அறிவின நலனும் ஆராய்ச்சித் திறனுமிக்க கட்டுரைகளையும் படித்துப் பேருவகையில் ஆழ்ந்தோம். பொன்னி. நீடுழி வாழ்ந்து, இப்படியே பொங்கல் மலர் ஆண்டு தோறும் கொணர்ந்து, நமது மக்க ளுக்கு விழிப்பையும பிறநலனக ளையும் தந்து தவுவதாக! தன்ன லங் கருதாது தொண்டாற்றி வரும் பொன்னியின் ஆசிரியர் அவர்கட்கு எங்கள் நன்றியும் வணக்கமும் உரித்தாகுக!

எம். வடிவேலன்
கௌரவக் காரிய தரிசி

○

தமிழகம்-டர்பன் 12-3-49

தங்களால் வெளியிடப் பெற்ற பொன்னி பொங்கல் மலரை, எனது தோழர் ஒருவர் எனது பார்வைக்கு அனுப்பி வைத்தார். மேலட்டை கண் களைக் கவர்ந்தது. அவசரம் அவசரமாகப் பக்கங்களைத் திருப்பினேன். கட்டுரைகளின் தலையங்கங்களையும், கட்டுரை யாளர்களின் படங்களையும் பெயர்களையும், கண்டேன். மலரில் மனம் லயித்து விட் டது. எடுத்த பசியும் அடங்கி விட்டது. ஆரம்பமுதல் இறுதி வரையும், அனைத்தையும் விடாது படித்தேன். இன்பக் கடலில் ஆழ்ந்தேன். மலரின் சிறப்பையும, அழகையும் கூறு வதென்றால் இடம் போதாது. ஆனால், தமிழ் இலக்கியம், நன்கு ஓம்பப் படாத நாளிலே, பொன்னியும், அதன் பொங்கல் மலரும் எழுந்து, மக்களுக்குத் தமிழ் இலக்கியப் பண்பாட்டை வெளிக்காட்டத் தோன்றியுள் ளன வென்றே கூறவேண்டும்.

மு. கண்ணபிரான்
நிர்வாகக் காரியதரிசி

○

டர்பன் -10-3-49

தேசியம பேசி. தேசத்தை நாசமாக்கும் நிசத்தனத்தை எடுத்துக் கூறியும், மதாபி மானத்திடம் தேசாபி மானத்தை அடகு வைத்து, சமுதாயப் புனிதத்தை அசங் கியமாக்கும் அநாகரிகத்தைக் கண்டித்தும் வரும் தங்கள் பொன்னியின், பொலிவுமிக்க

பொங்கல் மலரை கண்ணுற்றுப் பூரித்தோமாயினும்; கமலா விருத்தாசலம் அவர்களின்' "புதுமைப் பித்தனின் கடைசி இரவைப்" பார்த்துக் கண்ணீர் உகுக்காமலிருக்க முடியவில்லை. எப்படியும், பொங்கல் மலரின் வண்ணப் படங்களையும்' எண்ணக் குவியல்களையும் கண்டோர்க்கு அவை புத்துணர்ச்சியையும், புத்தறிவையும், பேரானந்தத்தையும் தருவதோடு, பொன்னிக்கு அழியாப் புகழும் உண்டாக்கி விட்டனவென்றே கூற வேண்டும்.

கு. கருணாகரி

O

கேட்டால் இந்திய இசைக்கழகம்
டர்பன் -11-3-49

இந்நாட்டில், தங்கள் பொன்னி பொங்கல் மலரைப் பற்றிப், பெரும் பேச்சாக இருந்தது. அதனைப் பார்க்க விரும்பி, ஒன்றை வாங்கினேன். பார்த்துப்பரமானந்தம் அடைந்தேன். கண்ணைக் கவரும அழகிய படங்களுடனும், உள்ளத்துக்கு உவகையூட்டும் பல இனிய கட்டுரைகள கதைகளைத் தாங்கியும் பொங்கல் மலர் வெளிவந்துள்ளது. முக்கியமாகப் பெரியாரின் படங்கள் இம்மலருக்கு மிகுந்த சோபையைத் தருகின்றன, பல இலக்கிய மேதைகளின் எழுத்துக்களும் இம்மலரில் பரிமளிக்கின்றன. ரசிகர்களுக்கு இது ஓர் அரிய பெரிய விருந்தாகுமென்பதற்கு ஐயமேயில்லை.

எம். என் நாயுடு
கௌரவக் காரியதரிசி

O

தாம்பரம் 3-4-49

தங்கள் 'பொங்கல் மலரைப் பற்றிப் பல நண்பர்கள் கருத்தோவியங்களையும் கண்டேன். ஆனால், என் உள்ளத்தை மட்டும் என் நெஞ்சு சென்ற இருட்டறையில் அடைத்துக் கைதியாக்கியது குற்றமதானே? இதோ விடுதலை. "பொன்னி நல்லாள் வசந்தகால உற்சவத்திற்குப் புறப்பட்டாள். அவளுக்கு அணி செய்து அழகூட்ட கவிதை, கட்டுரை, காவியம், ஓவியம் எல்லாம் போட்டி போட்டு அவளை 'இவளுக்கு இணையார்!' என அலங்கரித்தன. இன்று அவள் உலக மன்றத்தில் 'கோஹினூர் வைரம்!' ஆனால் இலண்டன் மாநகர் கணகாட்சியில் சிறைபட்டுக் கிடப்பவளா, இவள்? இல்லை, இல்லை! புதுமை உலகத்தில் பகுத்தறிவு ஒளி விசும் வைரத்தாள்!"

"கரந்தையன்"

O

அண்ணாமலை நகர் 17-3 49

பொன்னியின் பொங்கலிதழ் பன்னாள் சென்று கண்ணுற்றேன். பொன்னி பொன்னியாகவே திகழ்கின்றது. வான் பொய்க்கினும் தான் பொய்யாதோடித் தமிழகத்தின் வளம் பெருக்கி வாழவைக்கின்றதே அதுபோலத் தன்மான அறிவு குறைந்த இந்நாளில் ஒரு மலராய் ஒழுகலாறுய்ப் பல கருத்துரை கொள் பலகாலாய்ப் பரந்து கட்டுரையும் கவிதையுமாக விரிந்து பல்வகை வளனையும் பெருக்குதல் போலப் பல விதமான அறிவுகளையும் பகுத்தறிவுச் செல்வத்தினையுந் தந்து திராவிடரை வாழ்விக்கப் பொன்னியே மாற்றுருப் பெற்று வந்ததொத்து விளங்குகின்றது. வண்ணத்

தாளில் வனப்புமிக்க படங்கள் கண்ணைக் கவர்கின்றன.

நா. நல்லொளியான்.

O

கோலாலம்பூர் 1-3-49

அழகும் அணியும் நிறைந்து அரிய கருத்துக்கள் பொதிந்து வெளிப் போந்த பொங்கற் புது மலரின் மணம் வையமெல்லாம் கமழட்டும்! கடல் கடந்த நாட்டில் வாழும் தமிழர் தம் வாழ்வில் மறுமலர்ச்சி கூட உற்ற துணை புரியப் பொன்னி நல்லாள வாழ்க!

"இன்பநாதன்"

O

கொழும்பு 30-3-49

'தங்களால் தான் முழுவதும் ஆர்ட் தாளில் அழகிய மலர் வெளியிட முடியும் என்று வீருப்புப் பேசும் வேதாந்தக் கூட்டத்தாரின் கொட்டத்தை அடக்குவது போல் பொன்னி மலர் வெளி வந்தது கண்டு என் போன்ற தன்மான உணர்ச்சியுடைய திராவிடர் மனம் உவகை அடைகின்றது. 'பிரேம்' போடக்கூடிய அழகிய படம். மூளைக்கு வேலை கொடுக்கும் தெவிட்டாத சொல்லோவியம். கண்ணுக்கும் கருத்துக்கும் ஒரே விருந்து. 'பொன்னி' மற்றைய பத்திரிகை போன்று படித்ததும் கடைக்கு அனுப்பி விடும் தன்மையல்ல! என்றென்றும் அழியாமல் பாதுகாக்க வேண்டிய திராவிடர் பொக்கிஷம். 'உயர் திரு உல்லாசம் அவர்கட்கு' 'சிலப்பதிகாரக் காட்சிகள், 'மாணவர் மன்றம்' போற்றக் கூடிய முயற்சி.

ந. பொ. ந. அரசன்

O

திருவேட்களம் 18-3-49

தமிழரின் உள்ளத்தில் பொங்கியெழுந்த இன்பப் பொங்கலின் பெருநாளின் பொன்னிமலர் வறுமைக் குடியில் பிறந்த எனக்குப் பொன் போன்றே கிடைத்தது. உள்ளம் பூத்துக் குலுங்கிற்று. அன்றிருந்த பாரதி இன்றிருந்தால் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்பதை மாற்றி நெஞ்சையள்ளும் பொன்னிப் புதுமலர்' என்று பாடாமல் இருக்கமாட்டார் என்பது உண்மையினும் உண்மை. பகுத்தறிவுத்தந்தை அறிவுக் கடல் அண்ணா, புரட்சிக் கவி பாரதிதாசன்போன்ற அறிஞர்களின் ஓவியங்கள் கண்ணையும் மனத்தையும் கவர்வன. இராமனைக் காணாது "தோள்கண்டார் தோளே கண்டார்" என்று வியந்து பாடிய கம்பர் இருந்தால் "பொன்னி மலரினைக் கண்டகண்ணால் பிற மலர் காணேன்" என்பார். பொன்னியின் ஒவ்வொரு கட்டுரைகளும் கவிதைகளும் கருத்திற்கு இன்பம் பயக்கும் அன்று அலர்ந்த மலர்த்தேன் துளிகள் என்று கூறின் பொய்யாகாது. பொன்னி பொங்கல் மலர் பொன் போன்றதே. வாழ்க பொன்னி என்று வாழ்த்துகிறேன். ஆனால் பொன்னியின் காதலர்களின் உள்ளத்தில்ஒரு குறை. பொங்கல்மலர் குறைந்த அளவில் எங்கள் ஊருக்கு வந்ததனால் காலத்தில் கண்டு களிக்க முடியாது தவிக்க நேர்ந்தது. இனி பொன்னி பொன்னுக் குள்ள பெருமைக்குமேல் பெருமையுற்று, ஏழை எளியவர்களின் கைகளிலும் குடிசைகளிலும் பொலிவு பெற்று விளங்க வேண்டும் என்பதே என் உள்ள அவா.

கூ. ஆறுமுகன்

உலகன் பட்டி—15-பங்கு-1980

பொன்னி பொங்கல் மலர் எனக்குக் கிடைத்தபோழ்து அருகிருந்த அன்பர்கள் விரும்பிகின்றனர். அவர்கள் மனங்குளிரப் பொன்னி நல்லாளை அனுப்பினேன. நண்பர்கள் மாணவ மாணவிகள் மாற்றுக் கட்சியினரின் மனைகள் தோறும் பொங்கல் விருந்தளித்து ஒரு கிழமைககு முன்னர் என்னகத்தே வந்து நின்ருள். அலுவல்களைப் புறத்தே வைத்து பொங்கல் விருந்துண்டு மகிழ்ந்தேன. தெவிட்டாத உணவு. அதன் சுவை அமிழ்தினும் இனியது. பொன்னி வழியாகத் தாங்கள் தமிழர்க்குச் செய்யும் தொண்டு போற்றற்பாலது. பொன்னி தமிழரின் அறிவுக் களஞ்சியம. அஃது பல்லாண்டுகள் வளர்ந்து தமிழர் நலனுக்குத் தொண்டு செய்க.

பழ. சிவ. பழநியப்பன்

சென்னை 2-3-49

'பொன்னி' தமிழர் நாட்டிலே ஆற்றி வரும மாபெரும் தொண்டைக் கண்டு மன மகிழ்ச்சி அடையும் பல்லாயிரக் கணக்கான அன்பர்களில் நானும ஒருவன். நம இயக்கத் திற்குச் சிந்தனையைத் தூண்டி விடும் சிறந்தகருத்துக்கள் மிளிரும ஒரு உயர்ந்த பத்திரிகை இல்லையே எனற குறையைப் 'பொனனி' தீர்த்துவைக்கிறது.

வ சம்பந்தன்

புதுச்சேரி 11-3-49

மாணவர் மன்றம் – சிறந்த பகுதிதான்! மாணவர் திறனை, அறிவாராய்ச்சியைப் பெருக்குவதே! ஆயினும் மாணவராயிருப்பவர் மட்டுமே கலந்து கொள்ளவேண்டும என்று கட்டுப்படுத்துவது என் போன்ற— மாணவராயிருந்த— இளைஞர்க்குத் தடையல்லவா? ஆவன செய்வீர்களா?

சு. மன்னர் மன்னன்

திருமணம்



வாழ்க இராமநாதன் — கோமதி!

சென்னை ஸ்டார் பிரசுரம் பதிப்பாசிரியரும், தமிழன்பருமான மதகுபட்டி திருவாளர் கண. இராமநாதன் அவர்கட்கும், நாட்டரசன்கோட்டை குப. ராம. லெ. லெட்சுமணன் செட்டியார் புதல்வி திருவளர் செல்வி கோமதிக்கும் சென்ற ஏப்ரல் 3-ந் தேதி நாட்டரசன்கோட்டை மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான நண்பர்களும், பெருமக்களும் திருமணத்திற்கு வந்திருந்து மணமக்களை வாழ்த்தினார்கள்; பரிசுகள் வழங்கினார்கள்.

○

துரோகி

- தில்லை வில்லாளன் -



ஒன்பதாம் அத்தியாயம்

கூட்டல் தொழில்

சோணிசந்த் ஊர்மிளாவின் கரம்பட்டதும் திரும்பிப் பார்த்தான். அவள் புன்னகை வழியும் வதனத்துடன் அவன் இரண்டு கரங்களைப் பற்றி இழுத்துக்கொண்டு பக்கத்து அறையினுள் நுழைந்தாள். அங்கு அழகாக அமர்ந்திருந்த பஞ்சணையில் உட்கார வைத்தாள். தாம்பூலம் மடித்துத் தந்தாள். சோணிசந்த் விபரந்தெரியாமல் விழித்தான்.

"மாமா........."

"என்ன ஊர்மிளா இன்று உனது செய்கைகள் புதிதாக இருக்கின்றன"

"ஆமாம், ஆமாம்"

மெதுவாக அவன் கன்னத்தைத் தட்டினாள். பிறகு ஆசையோடுகிள்ளினாள். அவன் மரக்கட்டையல்லவே, கொஞ்சம் உணர்வுகட்டுத்தளர்ந்தது! இருந்தாலும் நிலைமையைப் புரிந்துகொள்ளவேண்டி நிதானமாகவே நடந்துகொண்டான். ஊர்மிளாவைச் சின்னஞ் சிறு வயதிலிருந்து பார்த்திருக்கிறான். தூக்கி வளர்த்த பாக்கியம் அவன்கரங்களுக்கு உண்டு! சுமந்து கிடந்த பெருமை அவன் தோள்களுக்கு உரிமை! ஆகவே அவள் எப்பொழுதுமே அவனோடு பழகுவாள். சிரித்து விளையாடுவாள். கேலியாகப் பேசுவாள். 'மாமா' என்று ஆசை ததும்ப அழைப்பாள். ஆனால் தொட்டுவிளையாடும் பழக்கம் அவளுக்கு வயது ஏற ஏறக் குறைந்து கொண்டே வந்து இப்பொழுது அறவே ஒழிந்து விட்டது. மேலும் அவளின் விளையாட்டு கன்னத்தைக் கிள்ளிக் கட்டிலுக்கிழுத்துத் தாம்பூலம் தரும் வரை வரும் என்று அவன் எதிர்பார்க்கவும் இல்லை. அதுவரை அப்படி

நடந்ததும்கிடையாது. அந்த அனுபவம் புதிது அவனுக்கு!



''மாமா, உனக்குப் பாடஞ் சொல்லித் தரேன் இப்போது''

''என்ன பாடம்?''

''உனக்குக் கூட்டல் தெரியுமா?''

''தெரியும்''

''கூட்டல் மிகவும் கடினமா?''

''இல்லையே!''

''இரண்டும், இரண்டும் எவ்வளவு?''

''நான்கு''

சோணிசந்துக்கு ஆச்சரியம் அளவிற்கு மீறிவிட்டது. அவளது செயலும், பேச்சும் விபரீதமாகிக் கொண்டே இருந்தன. அவனால் சமாளிக்க முடியாத அளவு போய்க்கொண்டிருந்தன! அவள் மேலும் தனது கேள்விகளை வீசினாள்.

''கூட்டல் தொழில் கேவலமானதா?''

''தெருக் கூட்டலா, வீடு கூட்டலா?''

''இரண்டுமில்லை. ஒன்றையும் ஒன்றையும் சேர்த்து வைத்தல்''

''நல்ல தொழில்தான்''

''அப்பொழுது பெண்ணையும், ஆணையும் கூட்டிவைத்தல்''

''புண்ணியமான காரியம்!''

''முறைப்படி திருமணம் செய்யாவிட்டால்''

''அது அபசாரம்!''

சோணிசந்துக்கு இப்பொழுது விபரம் கொஞ்சம் தெரிந்தது. இருந்தாலும முழுவதுமா கண்டுகொள்ள அவனால் முடியவில்லை.

''மாமா அன்று காளிகோயிலில் நீயுந்தானே இருந்தாய். கடைசியில் குதிரையில் வந்தானே அவனை உனக்குத்தெரியுமல்லவா? அவன்தான் முடின்கான்! அவனை எப்படியும நான் சந்திக்க வேண்டும். உன் உதவி தான் எனக்கிருக்கிறது. எங்கள் இருவரையும் கூட்டி வைக்கும் புண்ணிய கைங்கரியத்தை உன்னிடத்தில் தான் ஒப்படைக்கிறேன் மாமா''

ஊர்மிளா இந்த வார்த்தைகளைக்கூறிக் கொண்டே அவன் அருகில் அமர்ந்தாள். தனது தங்கக்கரங்களால் அவனது இடையைச் சுற்றி வளைத்தாள். சோணிசந்த் இனியும் தயங்குவானா? ஆர்வந்ததும்பும் கண்களால் அவளை நோக்கினான்.

''ஊர்மிளா, உன்விருப்பப்படி நான் செய்கிறேன். ஆனால் நீ ஒரு உதவி செய்யவேண்டும். அங்கு நடக்கும் செய்திகளை உரையாடல்களை எனக்கு அவ்வப்பொழுது தெரிவிக்கவேண்டும். ஆமாம், என்னை மறந்துவிடக் கூடாது!''

"ஆகட்டும், என் செல்ல மாமா!"

சோணிசந்த் ஏற்றுக் கொண்ட பெருங் காரியத்திற்காக அவனது கன்னத்தில் ஒரு முத்தம் அச்சாரமாகக் கிடைத்தது! அச்சாரந் தந்த அந்த மாடப் புரு அத்தோடு பறந்துவிட்டது! சோணிசந்தின் கனவு கலைந்துவிட்டது.

அவன் அந்த அனுபவத்தில் கண்ட அரைகுறை இன்பத்தோடு, "காத்திருப்போம், காலம் மாறும்" என்று கவிதை பாடிக் காலங் கடத்த முடிவு செய்தான்.

பத்தாம் அத்தியாயம்

டில்லி செல்வோம்!

முடீன்கான் அந்தக் கடிதத்தை ஆர்வத்தோடுபிரித்தான். சோணிசந்த் யாரென்று தெரிந்திருந்தால் அவனுக்குக் கடிதத்தைப் பிரிப்பதற்குள் விபரந் தெரிந்திருக்கும். ஆனால் அவன் யாரென்று தெரியாது. மேலும் அவன் எதையும் சொல்லாமல், இந்தக் கடிதத்தைத் தங்களிடம் ஒரு அழகிய பெண் சேர்க்கச்சொன்னாள் என்றுமட்டும் கூறிவிட்டு விடையைக்கூட எதிர்பார்க்காமல் வெளியேறிவிட்டான்.

அவன் பிரித்தான்.........

ஆசைக் காதலரே!

தங்கள் அன்பு முத்தங்களுக்கு ஏங்கித் தவிக்கிறேன். என்னை உங்கள் நண்பர் மிருகமாக்கினர். நீங்கள் என்னை ஒரு வன தேவதையாக்க வேண்டும்! ஆம், அதே காளி கோவிலில், ஈஸ்வரியின் முன்னிலையில் நம் காதல் பொங்கலைப் படைத்து எடுத்துப் பய பக்தியோடுஉண்ணவேண்டும். என் உள்ளந் துடிக்கிறது. மறுக்காமல் நாளை மாலை ஆறு மணிக்குக் காளி கோயிலில் என்னைச் சந்தியுங்கள்.

தங்கள் காதலை நாடிநிற்கும்

ஊர்மிளா.

இதனைப் படித்து முடித்ததும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. விபரீதமாகக்கூடப் பட்டது! ஒரு வேளை இதில் ஏதேனும் சூழ்ச்சி இருக்குமோ, அமீன் சந்தின் நரித்தனம் இதிலும் புகுந்து மறைந்திருக்குமோ என்று கருதினன். எதற்கும் ஸ்வராஜுவைக் கலந்தே இதில் இறங்கவேண்டும் என்றுமட்டும் உறுதியாக முடிவுசெய்துகொண்டான்.

அதே நேரத்தில் ஸ்வராஜ் வந்தான்!

"முடீன், காரியம் காய்தான்"

"தாத்தா என்னதான் சொன்னார்?"

"யோசிக்கிறாராம், பொறுத்திருந்து பார்க்கவேண்டுமாம்"

"இந்த வெளிநாட்டுவெள்ளையரிடம் அவருக்கு ஏன் அவ்வளவு காதல்?"

"அதுதான் எனக்கும் விளங்கவில்லை"

முடீன்கானுக்கு உடனே அந்தக் காதல் குழப்பத்தைச் சொல்லிவிடவேண்டும் என்ற ஆசை! அதற்காகவே அவன் தக்க சமயம் பார்த்தான். ஆகவே உடனே சொல்லிவைத்தான் இந்த வார்த்தைகளை—

"எனக்குந்தான் வேறொன்று விளங்கவில்லை!"

"என்ன அது?"

முடன் அந்தக் கடிதத்தை அவனிடம் காட்டினான். ஸுராஜ் அதைப் படித்துப் பார்த்துவிட்டுச் சிரித்தான்.

"இதிலே ஒரு பெரிய படுகுழி தயாரிக்கப்படுகிறது. நம்மிருவரையும் பிரிக்க அமீன் சந்த் தன் மகளையே பணயம் வைக்கிறான். தெரிகிறதா? பாலம் போட முடியாத அளவு நம்மிடையே பிளவை உண்டு பண்ண முயற்சி செய்கிறான்"

"அவன் கிடக்கிறான் பைத்தியக்காரன்! ஊர்மிளாவைப் போல ஆயிரம் பேர் எனக்குண்டு. நீ அவசியம்போய் அவளைத் தேவதையாக்கு, நீயும் தேவனாகு! ஆனால் பறந்துமட்டும் சென்று விடாதே. இங்கு வந்து சேர்ந்துவிடு"



ஸுராஜ் கேலியோடு பேசினன். ஆம், அரச மாளிகையில் காளி கோயில் நிகழ்ச்சிகள் ஆயிரமாயிரம் நடக்கும். அவை அங்கு வேடிக்கையாக நடைபெறும் விளையாட்டுப் பந்தயங்கள்! ஸுராஜ் இந்த விளையாடல்களில் எத்தனையோ முறைகள் கலந்து கொண்டிருக்கின்ன். வெற்றிதான் அவனுக்கு, வீழ்ச்சியென்ற பேச்சே கிடையாது! ஆகவே ஊர்மிளாவை அன்றைய விருந்திலே கிடைத்த மதுக்கிண்ணமாகவே மதிப்பிட்டான். அடுத்தநாள் வேறுகிண்ணந்தான் அவன் தேடுவான். அமீன்சந்தின் எண்ணம் முடின் கூறியதுபோல இருந்தால் அவனுக்கு நிச்சயம் ஏமாற்றந்தான் பரிசில்லாகக் கிடைக்கும்.

"ஸுராஜ், அடுத்தபடி நாம் செய்ய வேண்டியது என்ன?"

"ஆம், நாம் டில்லி செல்ல வேண்டியதுதான்"

"போய்.........?"

"பாதுஷாவின் உத்தரவு பெற்று இந்த வெள்ளைய வெறி நாய்களை மண்டையிலடிக்க வேண்டியதுதான்"

"சரி செல்வோம், தாதா தடைசெய்தால்......?"

"அவருக்கு நமது பிரயாணத்திட்டமே தெரியக்கூடாது. வங்கத்தின் எல்லையைத்தாண்டிய பிறகே இந்தச் செய்தி அவரது செவிகளுக்கு எட்ட வேண்டும்"

"அங்கு சென்றல் அவர் மட்டும் எப்படி ஒப்புவார் நமது படையெடுப்புத் திட்டத்திற்கு"

"நிலைமையை நேர்மையாக விளக்கிடுவோம்"

"தாதாவே மறுத்துவிட்ட பிறகு......"

"தாதாவின் ஆணையின் பேரில்தான் வந்திருக்கிறேம் என்று பச்சையாகப் புளுகுவோம்"

நண்பர்கள் டில்லி செல்லத் திட்டமிட்டுவிட்டார்கள். அவர்கள் எண்ணியதை முடிக்காது விட்டுவிடுகிற பழக்கம் இல்லை. ஆனல் இதுவரை அவர்கள் திட்டத்திற்கு அடிப்படை அநேகமாக வேல்விழிகளாகத்தான் இருப்பது பழக்கம்! ஆனல் இப்பொழுதோ ஒரு பெரிய அரசியல் சூருவளியே அடிப்படையாக இருந்தது. அவர்கள் வெள்ளையர்களின் கொட்டத்தை எப்படியும் அடக்கி விடவேண்டும் என்று திட்டமிட்டார்கள். காரணம் அவர்களின் செயல்கள் மட்டுமல்ல, ஏதோ ஒரு வகையான வெறுப்பு அவர்கள்மனத்திலே வேரூன்றி விட்டது! அதனை அகற்ற அவர்களால் முடியவில்லை. ஆகவேதான் எந்த முறையிலாவது எதிர்த்துப் போராடிப் பார்த்து விடுவது என்று முடிவு செய்து அலிவர்திகானிடம் சென்றதில் முயற்சி தோல்வியடைந்தது. இப்பொழுது டில்லி சென்று பாதுஷா ஷாஆலத்தின் துணை பெறலாம் என்ற நம்பிக்கையில் இருவரும் மறுநாளே தங்கள் பயணத்தை இரகசியமாகத் தொடங்க முடிவு செய்துவிட்டார்கள்.

முடின் டில்லியை நினைப்பதற்கு முன்னலே காளிகோயில் நினைவிற்கு வந்தது. காளி கோயில் அவனுக்கு ஏதோ ஒரு இன்பக் களரியாகவே தோன்றியது! தொடரும் ○



சந்தைச் சரக்கல்ல

-தமிழரசன்-

மேலைத் திசையில் கதிரோன் விளையாட
மாலை யழகு சிரிக்க, இயற்கை
வழங்கும் இளங்காற்று வாங்கும் பொருட்டு
முழங்கும் கடல்நோக்கி முன்னேறிச் சென்றேன்.
கரையருகே நின்றஒரு கட்டழகி, ஆங்கு
திரையருகே வந்து வந்து செய்தியொன்று சொல்வது போல்
முட்டிவிட்டுப் பின்னர்ப் பெருமூச்சு விட்டுவிட்டு
வெட்டிவிட்ட ஆலமரம் வீழ்வதைப்போல் சத்தமிட்டு
செல்வதைத்தான் பார்த்தபடி சேயிழையும் நின்றிருந்தாள்.
மெல்ல அவளருகே மேவினேன், பக்கம்
நெருங்கினேன். அன்னாள் நினைப்பை அறிய
விரும்பி, மெதுவாகப் பேச்செடுத்தேன், "இந்தக்
கடலுக்கேனென்ன கடுங்கோபம் பாராய்?
படமெடுத்த நாகம்போல் பாய்ந்துவரும் பேரலைகள்"
என்றேன்; சிரித்தாள்! "ஏனதற்குக் கோப"மென்றாள்
"நின்றாலுன் சீரடிகள் நோகு"மென்றேன்; உட்கார்ந்தாள்
மீண்டும் அவள்பார்த்தாள்; நான்பார்த்தேன்; அப்பார்வை
தூண்டியதென் னுள்ளத்தை! தூங்கும் உணர்ச்சியெல்லாம்
கண்விழித்து என்னெதிரே கையூன்றி வீற்றிருக்கும்
பெண்மதியைக் கவ்வி விழுங்கத் துடித்ததடா!
"கூறும்! கடலுக்குக் கோபம்வந்த காரணத்தை!
சேறும் களிமண்ணும் சேர்த்துவரும் சாக்கடைகள்
வீழ்ந்து கடலழகை வீணாக்கிப் போட்டனவா?
சூழ்ந்த நெடுங்கரைக்கும் துள்ளிவரும் பேரலைக்கும்
சச்சரவு ஏதேனும் உண்டா? அதுவன்றி
அச்சம் தரும் வகையில் யாரும் அதட்டினரா?
ஏனதற்குக் கோபம்? இசைத்திடுவீ"ரென்றாள்; நற்
கானமதைக் கேட்டிருந்த காதிரண்டும் நன்றிசொல

நானுமதைப் புன்சிரிப்பால் நங்கைக் குணர்த்திவிட்டு
வானில் விளையாடும் வண்ணமதி என்னருகே
வீற்றிருந்து பார்க்கையிலே வீறிட்ட காதலினால்
ஊற்றெடுத்த நீர்போல ஊறிவரும் எண்ணமெல்லாம்
கொட்டினேன்; பாட்டாய்க் குவித்தேன்; மனக்கோட்டை
கட்டினேன்; கற்பனையைக் கட்டவிழ்த்து விட்டேன் நான்
"நேற்றிரவு வானில் நிலாப்பெண் சிரித்தபடி
மேற்றிசைக்குப் போம்போது, பார்த்த விரிகடல்தான்
மிஞ்சுகின்ற காதலினால் நெஞ்சைப் பறிகொடுத்துக்
கெஞ்சினான்; கேட்டான்; பயனில்லை; அப்பெண்ணே
கைவிரித்துப் போய்விட்டாள் கண்மூடித்தூங்குதற்கே
பொய்விரிக்க வில்லைநான்; நீயிங்குப் போந்தவுடன்
அந்திப்பொழுதில் அழகுநிலா என்னிடத்தில்
வந்தாளோ மீண்டு! மனமிரங்கி விட்டாளோ?
என்ற மயக்கத்தால் உன்னடியை முத்தமிட
முன்வந்து பார்த்தும் முடியாமல் போனதனால்
வெஞ்சினத்தைக் காட்டுதடி! வேறென்ன! உன்னழகில்
நெஞ்சைப் பறிகொடுத்த என்னிலையும் கண்டுவிட்டால்
உள்ளம் குமுறாதா?" என்று முடித்தேன்நான்.
பள்ளத்தில் வீழ்ந்தவள்போல் பாவை திடுக்கிட்டாள்.
நெஞ்சைத் திருகும் நினைப்பை யடக்கிநான்
செஞ்சொல் எதிர்பார்த்தேன். சேயிழை கூறுகின்றாள்
"கடல்என்ற கன்னியின்மேல் காதல் கொண்டவன்போல்
நடித்துப் பகலல்லாம் நம்பிக்கை யூட்டி
அவளிடமே இன்பம் அருந்திவிட்டுப் பின்னர்
சவம்போற் கதிரவனும் சாய்ந்துவிட்டான் மேற்கில்
இதையெண்ணி யெண்ணி இக்கடலும் ஏங்கும்.
கதையெனினும் நல்ல கருத்துள்ள கற்பனையே?"
என்றாள்; "வணக்கம்" எனக்கூறிச் சென்றுவிட்டாள்.
நின்றேன் நெடுமரம்போல்; நின்றபடி சிந்தித்தேன்;
விந்தை யெனினும் உளம்தெளிந்தேன்; மெய்க்காதல்
சந்தைச் சரக்கல்ல தான்!



உயர்ந்த உல்லாசம் அவர்கட்கு

4. ஓர் இரவு.

நேற்று இரவு ஒரு மணி இருக்கும். விடுதலையைப் பறிகொடுத்தவன் போல, உள்ளத்திலே அமைதியின்றி, வீதியிலே நடந்து கொண்டிருந்தேன். நகரின் எல்லாப்பாகங்களிலும் மின்சார விளக்குகள் ஒளியை வாரி இறைத்துக் கொண்டிருந்தன. ஆனால் என் நெஞ்சத்தைச் சூழ்ந்திருந்த இருள்மட்டும் நீங்கினபாடில்லை. சித்தம் குலைந்த பித்தனைபோல எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கத்தோடு, தள்ளாடிச் சென்று கொண்டிருந்தேன.

எங்கே போவது என்ற யோசனையை என் கால்களுக்கு விட்டுவிட்டு, சிந்தனையை மட்டும் வேறுவழியில்செலுத்த ஆரம்பித்தேன். தூரத்திலே இரண்டொரு நாய்கள் குலைக்கும் சத்தம் கேட்டது. "தாங்கள்தான் ஊர்க் காவலாளிகள் என்றஎண்ணம்அவைகளுக்கு! கடிகாரத்தின் 'டிக்டிக்' என்ற ஓசையோடு என் இருதயமும் சேர்ந்து அடித்துக்கொண்டது. அமைதியை ஊடுருவிக் கொண்டு நடந்து சென்றேன்.

ஆம். அமைதிதான். எங்கும் அதனுடைய அமுல்தான் பரவி இருந்தது. அந்தச் சட்டத்தை மீறிய வண்ணம் வானத்திலேசிற்சில சாக்குருவிகள் 'கிரீச்'சென்று கத்திக் கொண்டு சென்றன. பயங்கரமான அமைதி. வானத்திலுள்ள நட்சத்திரங்களெல்லாம், 'இந்தச் செத்த அமைதியிலே இச் செத்த மனிதன் செல்கின்றானே' என்று என்னை நோக்கிச் சிரித்த வண்ணம் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. நிலாவுக்கு அன்று ஓய்வு நாள்.

எங்கேயோ மணி இரண்டு அடிக்கும் சத்தம் கேட்டது. உழைத்து உழைத்துப் பயனில்லாமல் உளளம உடைந்து உருக்குலைந்த தொழிலாளி கூட, இந்த நன்றிகெட்ட உலகத்தை மறந்து நிமமதியாகத் தூங்கும்நேரம். பணம்படைத்த சீமான்கள் தங்கள் உடலைப் பஞ்சணையில் புரளவிட்டு, உள்ளத்தைப் பணப் பெட்டியிலே வைத்துவிட்டு முக்கி முனகிக் கொண்டிருக்கும் நேரம். கள்ளர்கள் தங்கள் கைச்சரக்கைக் காட்டுகின்ற வேளை. நடந்து கொண்டிருக்கும் என் கால்களுக்குத் தடையுத்தரவு போட்டேன்.

இப்பொழுது நான் கோபுரத்துக்குச் சமீபத்தில் நின்று கொண்டிருந்தேன். நிமிர்ந்து பார்த்தேன். கோபுரம் வானத்தை முத்தமிட்டுக் கொண்டிருந்தது. அடேயப்பா! எவ்வளவு உயரம்! என் உள்ளம் இன்னும் இன்னும் உயரப் பறந்துகொண்டிருந்தது. என் கண்கள் இரண்டாயிரம் வருடங்களுக்கு முந்திய காட்சியைக் கண்டுகொண்டிருந்தன.

இங்கிலாந்தைப் போல, ருசியாவைப்போல, பெரிய வல்லரசாக இருந்தது தமிழகம். அப்போது இங்கிலாந்திலுள்ளோர் தேம்ஸ் நதியிலே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். ருஷியா ஓர் பனிக்காடு. அப்போது நாகரிகத்தின் பிறப்பிடம் தமிழகம்! எகிப்துக்கு முத்துக்களை ஏற்றுமதிசெய்த காலம். எதிர்த்த அரசர்களின் முடி இவர்கள் அடியில் கிடந்தது. மக்களுக்குத் துன்பம் என்றால் என்ன என்று தெரியாத காலம்! இன்பத்தின் உச்சியை எட்டிப் பிடித்திருந்த வேளை! இன்று அவர்கள் வாழ்ந்திருந்த பெருமையின் சின்னங்களில் — எதிர்காலம் அறியத்தக்க அடையாளம் — ஒன்றுகூட இல்லை.

இதோ, இங்கு கோயிலா இருந்தது? கிடையாது. இது, தபோதனர்கள் என்றுசொல்லிக்கொண்டு வந்த தற்குறிகளின் ஏற்பாடு. 'மகேஸ்வரன், மாகாளி' என்று மனத்திலே வஞ்சகத்தை மறைத்துக் கொண்டுவந்த மடையர்களின் ஏற்பாடு.

இந்த இடம், ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வியளித்துவந்த பல்கலைக் கழகமாக விளங்கியது. அவர்களிடம் முத்தமிழ் கொஞ்சிக்கிடந்தது. அவர்கள் நெஞ்சிலே தவழ்ந்து விளையாடியது. இன்று.........

எவனோ ஒருவன் பேச்சைக் கேட்டு எவனோ ஒருவன், பல லட்சம் மக்களின் இரத்தத்தைக் கொட்டி, இதைக் கட்டி, வெளவால்களைக் குடியேற்றினான். பாம்புகளுக்கு இடம் கொடுத்தான். சிங்கம் வாழ்ந்த குகையைச் சிறு நரிக்குச் சேர்த்துவிட்டான். நாசத்தை நாடாளச் செய்தான். அவன் — இறந்தகால அறிவாளி — நிகழ்காலத்து முட்டாள் — வருங்காலப் பித்தன்.

கோட்டைகள் இருந்த இடத்தில் கோட்டானும் பாம்பும் குடியேறிவிட்டன. மன்னன் மாளிகை மண்ணோடு மண்ணாய் மறைந்துவிட்டது அவர்களுடைய தர்ம சிந்தனை குடியேறினவனைக் கொள்ளைக்காரனாக்கிற்று. அவர்களது நம்பிக்கை நாசத்தைக் கொடுத்தது. கபடமற்ற அவர்கள் உள்ளத்திலே, குற்றமற்ற அவர்கள் நெஞ்சிலே, ஒரு சொட்டு நஞ்சு கலந்துவிட்டது.

மனிதன் மிருகமானான். பீடு பெருமைகளெல்லாம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டன. நாகரிகம், நாலாயிரம் மைலுக்கும் அப்பால் இருப்பவனிடம் ஓடியது. அறிவும் ஆராய்ச்சியும் அந்தராத்மாவின் கட்டளையை எதிர்பார்க்கும் அளவுக்கு வந்துவிட்டது. வீழ்ச்சி! படுமோசமான வீழ்ச்சி. உயர உயரச்சென்று கொண்டிருந்த என் உள்ளம் 'பொத்'தென்று கீழே விழுந்தது.

திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தேன். பக்கத்திலே குடித்துவிட்டுவந்த ஒருவன் தள்ளாடிய வண்ணம் அப்பொழுதுதான் கீழே விழுந்தான். அவன் தள்ளாடியதுபோலவே அவன் புத்தியும் தள்ளாடிக் கொண்டிருந்தது. ஆனால் அவன் சொல்லுகிறான் "நான் மட்டுமா தடுமாறுகிறேன்? இந்த உலகமே தடுமாறிக்



கண் டாக்டர்:- என்னையா, இவ்வளவு கிட்டவந்தும், ஒன்னும் தெரியலே யேன்னு சொல்றியே!

கண் நோயாளி:- கோவிச்சுக்காதிங்க, கோவிச்சுக்காதிங்க! எனக்குப் படிக்கவே தெரியாதுங்களே!

கொண்டுதானே இருக்கிறது'' என்று. அவனைத் தூக்கி ஒரு புறம் படுக்கவைத்துவிட்டு அப்பாற் சென்றேன்.

அதோ! வீதியை வீடாகக் கொண்டு கையைத் தலையணையாக வைத்து, காலைச் சுருட்டி உடம்பை ஒடுக்கி, உறங்கிக் கொண்டிருக்கும் ஏழைமக்கள். ஒரே கந்தல் உடைதான் அவர்கள் உடலைச் சுற்றியிருக்கிறது ஆனால் அதையும் வீசுகின்ற காற்று பிடுங்கிக் கொண்டிருக்கின்றது. அவர்களின் களங்கமற்ற முகத்திலே எந்தவிதமான உணர்ச்சியையும் காணோம். அவர்கள் உள்ளத்திலே ஏற்பட்ட கிறல்களின் பிரதிபலிப்பு அவர்கள் முகத்தில் இருந்தது. உணர்ச்சிதான் ஒடுக்கப்பட்டு விட்டதே!

ஏ! உல்லாசியே! உன்னிடம் பணம் இருக்கிறது. அவர்களிடம் அது இல்லை. இதுதான் இருவருக்குமுள்ள வித்தியாசம். ஆனால் அவர்களும் மனிதர்கள் தாம். மாறாக நீதான் அவர்களிடம் மிருகமாக நடந்து கொள்கிறாய்! அவர்களை வெறுக்கின்றாய். அவர்கள் — உன்னால் ஒதுக்கப்பட்டவர்கள். சமூகத்தால் தள்ளி வைக்கப்பட்டவர்கள். அவர்கள் அநாதைகள் — யாருமறியாதவர்கள் — நாடோடிகள்.


உன்னிடம் பணம் இருந்து என்ன பயன்? கற்சிலைக்கு மல்லவா கரம் கூப்பிக் காசைக் கொட்டிக் கரியாக்குகின்றாய்! உனக்காகத் தனது எலும்பை முறித்து இரத்தத்தைச் சிந்தி உழைத்தவனுக்கு ஒரு உதவி செய்யக் கூடாதா?

வாழவகையற்ற ஏழைமக்கள்! ஆம்! இவர்களுக்கு இந்தக் கொலையுலகம் தந்த பரிசு வசவு மொழிகள் — வசதியல்ல. உலகம் ஏறெடுத்துப் பார்ப்பதெல்லாம் உல்லாசியை; உழைபபவர்கள் உல்லாசியால் மறைக்கப் படுகின்றனர்! சட்டம் — உல்லாசியின் நண்பன்; உழைப்போரின் பரமவிரோதி!

கொடுமைக் காளான ஏழை மக்களின் கொதிப்பேறிய ரத்தம் உல்லாசிகளின் உணர்ச்சியற்ற போக்குக்கு அபாய அறிகுறி! அதனை உணர்ந்து அவர்கள் நடந்து கொள்ளவில்லையானால் எதிர்காலம் அவர்களைத் தூக்கு மேடையில் கொண்டுவந்து நிறுத்தும். அப்பொழுது தொழிலாளர்கள் உங்களுக்குச் சவக்குழி தோண்ட மறக்க மாட்டார்கள்.

வணக்கம்

வழிப்போக்கன்



வாரிசு

— தே. நாராயணன் —

"தம்பித் துரை! இதுவரை எழுதின வாசகத்தை வார்த்தை விடாமே, நிதானமாக – நிறுத்தி வாசிடா"

"பொய்யில்லா மெய்யன் துணையிலிருந்து ஆரம்பிக்கட்டு மாப்பா!"

"அதிகப்படிச்ச மூஞ்சூறு! கோயம்புத்தூர் ....என்பதிலிருந்து படியடா"

தம்பித்துரை படித்தான்:

கோயம்புத்தூர்க் கம்மாளத் தெருவிலிருக்கும் கோபால் சாமிப் பத்தர் மகளும் எனது பாரியாளுமான நல்லதங்காள் அம்மாளுக்கு, மைசூர் கிருஷ்ணராஜ உடையார் தெருவில் தங்கவேலை செய்துவரும் சிவஞானப்பத்தர் எழுதிக்கொடுக்கும் வாக்குப் பிரமாணப் பத்திரமாவது: உன்னைக் கல்யாணம் செய்து, நாளிது தேதி வரையில் எட்டு வருடங்கள் ஆகியும் புத்ர பாக்கியம் இல்லாததால், கடந்த இரண்டு வருடகாலமாக மனம் வேறுபட்டு, நீ உன் பிறந்த வீட்டிலேயே இருந்து வருகிறாய். எங்கள் பரம்பரையில், எனக்கு நேர்ந்தது மாதிரி யாருக்கும் இல்லாதிருக்கும்போது, எனக்குமட்டும் இந்த அபகீர்த்தி வந்துவிடாதிருக்க, இரண்டாந்தாரமாகத் திருச்சி ஆனந்தப் பத்தர் மகள் தங்கத்தை விவாகம் செய்ய உத்தேசித்திருக்கிறேன். இதனால் உனது சவரட்சணையில் எந்தக் குறையும் வராது. எனது கல்யாணம் இன்னும் இருபது தினங்களில் பெண் வீட்டில் நடக்கும். உன்னை உன் தகப்பனார் கோபால்சாமிப் பத்தர், கல்யாணத்திற்கு மறுநாள்,

மைசூர் புறப்படும் என்னிடம் சேர்ப்பித்துவிட வேண்டியது. உயிர் உள்ள வரையில் உண வும் உடையும் கொடுத்துவரு வேணுகவும; உன் சுக துக்கங் களில் பங்கு உள்ளவனுக இருப்பேனுகவும்; அல் லாமலும் மேற்கண்ட விதமாக ஒத்துவாழ முடியாவிட்டால் உன் ஜீவனும்சச் செலவுக்காக மாதம் இருபது ரூபாய்கள் கொடுப்பேனுகவும்; இதன்படி நடக்க நான தவறினல் இந் தப் பிரமாணப பத்திரம் எழு தும்போது உடனிருக்கும் பஞ் சாயத்தார்களின் திர்ப்புக்குக் கட்டுப்படுவேனுகவும்.

இப்படிக்கு,

....

நல்ல தங்காள் அம்மாளின் தகப்பனுர்....................
பஞ்சாயத்தார்கள

1) ....
2) ....
3) ....

"என்ன கோயம்புத்தூராரே! இதிலே ஒன்னும் ஆட்சேபனே கிடையாதே! உம் மருமகன் ஊதாரியாகத் திரிகிருர் என்று நாலுபேர் தூற்றுவதைக் காட்டிலும, இரண்டாந்தார மாக ஒரு பெண்ணேக் கட்டிக் கொண்டு, மூத்தாளேயும் ஒத் துமையாக வைத்துக்கொண்டு பூவும் பிஞ்சுமா வாழ்கிருர்னு சொன்னல், அது உமக்குத் தான் பெருமை!...... அது சரி! என்ன யோசனே? காரியம் நடக்கட்டும. நிச்சியார்த்த வேலே வேறே சுமந்துகிடக்கு. மாப்பிள்ளே இட்டே கை யெழுத்தை வாங்குங்க; கோயம் புத்தூரார், பஞ்சாயத்தார்க ளெல்லாம் கையெழுத்தைப் போட்டு மங்களகரமாகக் காரி யத்தை முடிங்க; ஊர் சிரிக்கி ருப்போலே தகராறுக்கு இடம் வைச்சுக் காதிங்க; அவ்வளவு தான்" என்று துரிதப்படுத்தி ஞர், தம்பித் துரையின் அப்பா ஆனந்தப் பத்தர்.

"அது சரியய்யா! உங்க வேலே முடிஞ்சு போச்சு! பக் காவா எழுதி வாங்கிட்டிய, இனிப் பதரும்மே என்ன செய் வீங்க; என் மக கவலே எனக் குத்தான் இருக்க முடியுமே தவிர, உங்களுக்கல்ல. பிரமா ணப் பத்திரததிலே நல்லவித மாப் பிடிமானம் இருந்தாத் தான், நான் கையெழுத்தை நாட்டுவேன். இல்லாதபோனு இருக்கவே இருக்கு கோர்ட் டும் சட்டமும் என் மக மலடா, அல்லது அவ ளேக் கட்டிக் கொண்டவன் மலடா என்பதை அது முடிவு செய்யட்டும்" என்று ஆத்திர மாகப் பேசினர் கோயம்புத் தூர்க் கோபால்சாமிப் பத்தர்.

"ஐயா பஞ்சாயத்தார்களே! ஊரைவிட்டு ஊர்வந்த இந்த மனுஷன் நல்லபடியாச் சமா தானத்துக்கு வருவதாக எனக் குப் படவில்லே. அவரு சட் டம எனனே என்னதான் பண் ணிடும் என்பதைப் பார்க்கத் தான் போறேன். இனிக் கிழ வனே வார்த்தைகளே அளந்து பேசச் சொல்லுங்க; இல்லாத போனல் நான் பொல்லாதவ னுகிப்பிடுவேன்" என்று தாவி ஞர் மைசூர் மாப்பிள்ளே சிவ ஞானப் பத்தர்.

"அடடா! வெண்ணெய் உருண்டு வரும்போது தாழி

உடைஞ்சதுபோலே வார்த்தைகளைக் கண்டபடிவிட்டு வாதத்தைக் கிளப்பிவிடாதிங்க. ஐயா மாப்பிள்ளை கொஞ்சம் கோபத்தை ஆற்றிக் கொண்டு வெளியே போய் இருங்க. என்ன கோயம்புத்தூராரே! படபடத்துப் பேசாதிங்க. நான் தான் கேட்கிறேன், உம் மகளுக்குச் சொத்தில்லே சுகமில்லேன்னு சொல்லிவிட்டாரா, அல்லது தலைக்குத்தான் எண்ணெயில்லேன்னு மறுத்திட்டாரா?'' என்று கிளம்பிய பூசலை நாசுக்காக அமுக்கினார் ஆனந்தப் பத்தர்.

"வாரத்திலே இரண்டு நாள் பிரியாணியும், தலைக்கு எண்ணெயும், மாதத்துக்கு ஒரு புடவையும் கொடுப்பேனாகவும், என்று பிரமாணப் பத்திரத்திலே கண்டு எழுதச் சொல்கிறார் போலிருக்கு!''— என்று இடையிலே தன நகைச்சுவைக் கைவரிசையைக் காட்டினார் பஞ்சாயத்துக்கு வந்திருந்த ஒருவர்.

''அடே, கேலி கிடக்கட்டுமய்யா! . கோயம்புத்தூரார் பேசிறதிலேயும் நியாயமஇருக்கு. அவர் பெத்தாத்தானா பிள்ளை! நானே என் பெண்ணைக்கொடுக்கப்போறேன். ஒரு கண்ணிலே சுண்ணாம்பும் இன்னொரு கண்ணிலே வெண்ணெயும் என்ற வேலையே கூடாது. பெத்த மனம் பிதற்றத்தான் செய்யும்; அதே சமயத்திலே கட்டிக் கொண்டவனுக்கு இல்லாத கரிசனை, பெத்துவிட்டவனுக்கு வந்துவிடுமா, என்பதையும் கோயம்புத்தூரார் கொஞ்சம் யோசிக்க வேணும். உம் மகளும் என் மகளும் விளக்கும் ஒளியும்போல ஒத்து வாழவேண்டு மென்பதுதான் என் மனப்பூர்வமான ஆசை'' என்று பேசினார் ஆனந்தப் பத்தர்.

நேரமாகிவிட்டதாகப் பஞ்சாயத்தார்கள் முணுமுணுத்தார்கள். கடைசியாக, 'இப்படிக்கு' என்ற இடத்தின் கீழே 'மைசூர் மாப்பிள்ளை' சிவஞானப் பத்தர் கையெழுத்தைப் போட்டார். அடுத்துக் கோயம்புத்தூர்மாமனார் கையெழுத்தை நாட்டிவிட்டு, மகளை நினைத்துக் கண்ணைக் கசக்கிக்கொண்டார். ரத்தினம் செட்டியார், வேலுப்பிள்ளை, முனிசாமி முதலியார் முதலியவர்கள் பஞ்சாயத்தார் வரிசையில் இடம் பெற்று, 'நான் அறிவேனாகவும்' என்று உறுதி கூறிக் கையெழுத்தைப் போட்டனர். கல்யாணத்தின் மறுநாள் தன் மகளைத் திருச்சியில் கொண்டு வந்து ஒப்பித்த பின், பிரமாணப் பத்திரத்தைப் பஞ்சாயத்தார்களிடமிருந்து பெற்றுக் கொள்வதாகக்கூறி, உடனே கோயம்புத்தூருக்கும் பயணமாகிவிட்டார் கோபால்சாமி பத்தர். வாசற்படிக்கு அந்தப் பக்கங்கூட அடியெடுத்து வைத்திருக்கமாட்டார். ''அப்பாடா! மனுஷனைப் பக்குவப்படுத்துவதற்குள் சாம, பேத, தானத்தையெல்லாம் பிரயோகிக்கவேண்டியதாப் போச்சு! திருச்சியிலே நடக்கப் போற சங்கதி எப்படியோ தெரிஞ்சு ஆளு அலறி அடிச்சு ஓடியாந்திருக்கானய்யா!'' — என்றார் ஆனந்தப்பத்தர்.

''அவன் நினைச்சு வந்ததெல்லாம், எப்படியும் இந்தக் காரியத்தைத் தடங்கல்செய்துவிடலாம்னு'' — என்று பயந்

தெளிந்து பேசினர் மைசூர் மாப்பிள்ளே.

"அது சரிங்க, நீங்க கொஞ்சம் சிரம பரிகாரம் எடுத்துக்குங்க. டேய் தம்பித்துரை! மறுபடியும் மேளகாரனைப் பார்த்து, நாளை சாயந்திரம் என்கிறதை ஞாபகப் படுத்திட்டு ஓடிவா" — என்று வேலை சொல்லிக்கொண்டே திண்டில் சாய்ந்தார் ஆனந்தப் பத்தர்.

O

"தங்கம்! எல்லாம் உன் நன்மைக்குத்தான். என் திட்டப்படி நடந்தாத்தான்விஷயம் விபரீதமாகப் போகாமே தடுக்கலாம். நான் கூட ஆள் வாட்டசாட்டமாக, சிறு வயதாகத்தான் இருப்பான்னு உத்தேசித்திருந்தேன். இவனுக்கு மீசை நரைச்சும், இன்னும் ஆசை நரைச்சபாடில்லை"

"துரையண்ணே! இந்தப் பித்துக்குளி வந்த கடிதத்தை வைத்து விளம்பரப்படுத்திஞ வீணை அபவாதம் எனக்கு மட்டுமல்ல; நம்ப குடும்பத்துக்கே அகௌரவம்"

"நீ நினைக்கிற மாதிரி இந்தப் பித்துக்குளி அவ்வளவு புத்திசாலியில்லை, தங்கம்! நீ வேண்டுமானுலும் பாரு, கடிதம் கைக்குக் கிடைச்சதும், ஆளும், அவனுக்குப் பெண் பார்க்க வந்திருக்கும் அக்காளும் ஓட்டம் எடுப்பது நிச்சயம்"

"இருந்திருந்தது, அப்பா, என்னை இந்தப் பாழுங்கிணத்திலே தள்ளப் பார்க்கிருரே, துரை."

"அப்பா மேலே ஒன்னும் பிசகில்லை தங்கம்! சம்பந்தம் நடந்ததெல்லாம் கடுதாசி மூலம். என் முதல் கல்யாணத்தைச் சிறப்பாக நடத்த நான் விரும்புவதாலும் உற்ருர் உறவினர்கள் வந்துகூட வசதியாய் இருப்பதாலும் திருச்சியிலேயே கல்யாணத்தை வைத்துக்கொள்ளலாம் என்று எழுதியதோடு, 25 வயதிலே பிடிச்ச போட்டோப் படத்தையும் அனுப்பியிருந்தது இந்த மன்மதக் குஞ்சு! அப்பாவுக்கு வெளுத்ததெல்லாம் பால்! ஆள் நேரே வந்ததும் விஷயம் பூராவும் புரிந்துவிட்டது. தடங்கலோ, தகருரோ ஏற்பட்டால் அகௌரவம் என்று நினைத்து, அடங்கி விட்டார். இதுதான் நடந்தது தங்கம்! கழுதை கெட்ட கேட்டுக்குநாற்பது வயதிலே இரண்டாந்தாரம்!"

"என்னமோ துரை! எனக்குப் பயமாயிருக்கு; வீணை பழிச் சொல் வந்தடைவதைக் காட்டிலும், இந்தப் பாழுங்கிழத்திற்கு இரண்டாவதுதாரமாகப் போனுலும் பரவாயில்லை"

"பயப்படாதே தங்கம்! கடிதத்தைச் தபாலில்சேர்த்து விடுகிறேன். நாளை அவனுக்குக் கிடைக்கும். பொறுத்திருந்து பாரேன்"

நேரம் நெருங்கிவிட்டது. பந்து மித்திரர்களில் பத்துப்பேர்கள் வந்து கூடியிருந்தனர். மாப்பிள்ளை வீட்டின் பிரதிநிதிகள் மாப்பிள்ளையும்,அவர் அக்காளுந்தான்! அவர்கள் இருவரையுமே காணேம்! நேரம் போகப்போக ஆனந்தப்பத்தர் திகிலடைந்து போனுர். மாப்பிள்ளை மாயமாய் மறைந்ததற்குக் காரணம் யாருக்குமே புலப்படவில்லை. விசாரித்ததில் நடுப்பகலில் மாப்பிள்ளைக்குத்

தபால் வந்ததாகவும், அதைப் படித்துக்கொண்டே திரிந்ததாகவும் தம்பித்துரையிட மிருந்து தெரியவந்தது. 'கண்ணே கண்ணு, ஒன்னே ஒன்னு' — என்று வளர்த்த தன் மகளின் நிச்சயார்த்தம் இப்படி நடந்ததைக் குறித்துப் பத்தர் வெகுவாக வருத்தப் பட்டார்.

இந்த நிகழ்ச்சி நடந்து, அந்த ஊருக்கு மட்டுமன்றிப் பத்தர் வீட்டிற்கே பழசாகி விட்டது. மைசூர்த் தபால் என்றதும் ஆவலாகப்பிரித்த ஆனந்தப்பத்தருக்கு, 'வெள்ளெழுத்து' ஞாபகமே இல்லை! தம்பித்துரையைக் கூப்பிட்டு. "டேய்! சத்தம் போட்டுப் படிக்காமே, காதோடு காதாகப் படிடா" என்றார்!

இதையும் தம்பித்துரை படித்தான:

"ஐயா!

அன்றைய தினம் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் திடீரென்று ஓடிவந்ததனால் என்னைப் பைத்தியம் என்றே எண்ணியிருப்பீர்கள். நல்ல வேளையாக, எவன் கிருபையாலோ தப்பினேன். அந்தச் சமயத்தில் கடிதம் எழுதி என்னைக் காத்த உத்தமனுக்குக் கோடி கோடி புண்ணியம். எனக்குப்பின், என் பெயர் சொல்ல ஒரு வாரிசு வேண்டுமென்பதற்காகவே இரண்டாந் தாரம் செய்து கொள்ள நினைத்தேன. ஆனால், என்பூர்வோத்திரமாகிய விஸ்வகர்மாகுலப் பெருமையின் பரிசுத்தம், என்னால் கெடும்படியிருந்து, கடைசி



யில் தப்பிவிட்டது. பிள்ளை யில்லா விட்டாலும் பாதக மில்லை; உங்கள் சம்பந்தத் தினால் என் குலப் பெருமை கெட்டு, அதன்மூலம் வரும் வாரிசை நான் விரும்பவில்லை.

அங்கிருந்து புறப்பட்டதும் நேரே கோயம்புத்தூர் வந்து நல்லதங்காளை அழைத்துச் சென்று மைசூரில் சுகமாக இருந்து வருகிறேன். என்னைத் தபபுவிக்கச் சமயசஞ்சீவியாக வந்தகடிதத்தையும் இத் துடன் அனுப்பியிருக்கிறேன்.

இப்படிக்கு,

சிவஞானப்பத்தர்''

'என்னடா கிணறுவெட்டப் பூதம் கிளம்புது' என்று தலை யைச் சொரிந்து கொண்டே, அந்தக் கடிதத்தையும் படிக்கச் சொன்னார். சிரித்துக்கொண்டே தம்பித்துரை படித்தான்:

''அன்புள்ள மைசூர் மாப் பிள்ளை அவர்களுக்கு,

வணக்கம். எனக்குச் சம்பந்த மில்லாத இவ்விஷயத்தில் நான் தலையிட விரும்பாவிட்டா லும், கடமை உணர்ச்சி என்னைப் பலவந்தப்படுத்தி எழுதச்சொல்கிறது. தாங்கள் சம்பந்தம் செய்யவந்திருக்கும் இவ்வூர் ஆனந்தப்பத்தர் குடும் பத்தைப்பற்றி உங்களுக்கு அதிகமாகத்தெரிந்திருக்க முடி யாது. முதலில் அவரைப் பற் றியே சரியான விபரம் உங்க ளுக்கு மைசூரில் கிடைத்திருக் கும் என்று நான் நினைக்க வில்லை.

அந்த மனுஷரிடம் நகை வேலைக்குக் கொடுக்கும் எந்த நபரின் தங்கமும் சுயமாகத் திரும்பியதில்லை. அவர் நாண யம் அவர் தொழிலோடுமட்டும நின்று விடவில்லை. அவர் குடும்ப விஷயமும் அப்படித் தான்! விளக்கமாகச் சொல்லப்போனால், அவர் மனைவி, நம விஸ்வகர்மா குலமல்ல; கலப்பு — மிக்சர். அதைக்கட்டிக் கொண்டார் ஆனந்தப்பத்தர். அவர்களுக் குப்பிறந்த 'தங்கத்'தை நீங்கள் நிச்சயார்த்தம செயயப் போவ தாக அறிந்தேன். உங்கள் குலப்பெருமையென்ன! அதை விட்டுவிட்டு, இந்த இடத்தில் சமபந்தம வைத்துக் கொள வது நல்லதல்ல! உடன் அதி லிருந்து தப்பிவிடுங்கள்.

உங்கள் நலம் நாடும்,

'உண்மை விளம்பி'

தம்பித்துரை சிரித்தவாறே படித்து முடித்தான்.

'' பைத்தியக்காரப் பயல்! கிளியை வளர்த்துப் பூனை கையிலே கொடுக்க நினைச் சேனே! எவன் எவனோ வழியிலே போறவன் எழுதின லெட்டரை வச்சிக்கிட்டு ஓடின பய. நாளை கழுத்திலே தாலி ஏறினதும், எவனோ சொன்னான் என்பதற் காக ஓடிவிடுவானே, இந்தத் தறுதலை. நல்லவேளை! நம்ப தங்கத்தை இவன் வாரிசுக் காகக் கொடுத்துவிட்டு, பிறக் கும் பிள்ளை பைத்தியக்காரப் பட்டம்வாங்கி, என்குலப்பெய ரைக் கெடுத்துக்காமத் தப் பிச்சேனே, அதுவே போதும்!'' என்றார் ஆனந்தப்பத்தர்.

பாரதிதாசன் பரம்பரை

தமிழ்த்தாய்

சிலம்பொலிக்க என்னருகில் ஒருத்தி வந்தாள்
சிற்றிடையில் மேகலைதான் மின்னக் கண்டேன்!
சிலிர்த்திட நல் ஒளிகாலும் அணியாம் சிந்தா
மணியினையும் திருமார்பிற் கண்டேன்! செய்ய
நலஞ்சேரும் குண்டலமும் காதில் மின்னக்
கண்டிட்டேன்! நானுளத்தைப் பறிகொ டுத்தேன்!
கலகலென வளையொலிக்க வந்தாள் என்றன்
கையிலொரு பொருள்வைத்தாள்! சிரித்து நின்றாள்!

'என்னவிது! என்னவிது!' என்றேன். ஒன்றும்
எனக்குரைக்க மாட்டாமல் அருகில் வந்தாள்;
'முன்னரென்னைக் கண்டதுண்டோ?' என்று சொல்லி
முன்பக்கம் நின்றிட்டாள்; அடடா என்றன்
கன்னல்தமிழ்க் கன்னியன்றோ? முப்பா லின்தாய்
கற்பனைக்கும் எட்டாத புலமை தந்த
சொன்னயத்தின் திரளன்றோ? தூய அன்புச்
சுடர்காட்டும் தாயென்றே போற்றிநின்றேன்!

[தருமபுரியைச் சேர்ந்த நண்பர் ப. சண்முகசுந்தரம் பாரதிதாசன் பரம்பரையினர்; தமிழ்த்தாய் பற்றிய அவர் பாடல் சுவை நிறைந்தது; அவர் ஒரு நாடகாசிரியர் — ஆசிரியர்]



பொறியும் கனலும்

க. சிவானந்தவல்லி

புதுமைக் கவி பாரதியார் மறைந்தார் — புரட்சிக் கவி பாரதிதாசன் நம்முடன் வாழ்கிருர். அவர்கள் இருவரிடையேயும் உள்ள கருத்து ஒற்றுமை வேற்றுமை பற்றிய உண்மைகளைச் சிறிது ஆராய்வோம். அவர்கள் நமக்களித்த சொல்லோவியங்களைப் புரட்டிப் பார்ப்போம் - கருத்துக்களைத் திரட்டிச் சேர்ப்போம், அவைகளை மதிப்பிட்டுப் பார்ப்போம்!

இருவருக்கும் பொதுவான சில கருத்துக்களைக் காணலாம். நம சங்கநூற்களைக் காணும் போது அவை மிக்க எளிய நடைகொண்டே மிளிர்கின்றன. கம்ப ராமாயணம் போன்ற இடைக்கால நூற்களே கடிய நடையை ஏற்றுள்ளன. இரு கவிஞர்களும் சங்கத்துப் பாடல்களைப் போலவே எளிய இனிய தமிழில் தங்கள் பாடல்களை நமக்களித்துள்ளனர். காலநிலைக் கேற்பக் கவிதை நடை மாறுபடும் என்பதையறியாத சிலர் இவற்றை வெள்ளைப் பாட்டுக்கள் என இழித்துக் கூறிவிடுகின்றனர்.

உலக வரலாற்றிலேயே எந்த நாட்டிலும், மிக முன்னேற்ற மடைந்தனவாக இன்று கருதப்படும் நாடுகளிலும் கூடப் புரட்சிக் கவிஞர்கள் பழமைக்கு மாறுபடப் பேசிய போது அவர்கள் நிந்திக்கப் பட்டனர். பின்னரே போற்றப்பட்டனர். இந்த உண்மைக்குப் பாரதியாரும் பாரதிதாசனும் மாறுபட்டவர்களல்லர்.

பாரதியார் மக்களுக்கு மொழிப பற்று, நாட்டுப் பற்று, விடுதலை வேட்கை முதலியவற்றைத் தம் கவிதைகள் வாயிலாக ஊட்டினர். எவர் எந்தக் கொள்கையைத் தொடங்கிவைத்தாலும் அதைக் கொண்டு நடத்தத் திறமையுள்ள ஓர் ஆள் தேவை. அவ்வகையில் பாரதியாரின் உள்ளக் கருத்துக்கள் அழிந்துபடா வண்ணம் பாரதிதாசன் நடத்திச் செல்லுகிருர்.

மக்களைச் சாதி சமயக்கட்டுப்பாடுகள் பெருந்துன்பத்துக் காளாக்குகின்றன. இவற்றை முளையிலேயே கிள்ளியெறிந்துவிட நினைத்த பாரதியார் 'சாதிகள் இல்லையடி பாப்பா குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்று குழந்தையிடம் கூறுகிருர். பாரதிதாசனும், 'வேண்டாத சாதி யிருட்டு வெளுப்பதற்குத் தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி' என்று குழந்தையைத்

தாலாட்டுகிறார். 'சாதியில் இழிவு கொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே' என்று பாரதியார் கூறினால், "இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி இருக்கின்றது தென்பானும் இருக்கின்றானே' என்று பாரதிதாசன் சுட்டிக் காட்டுகிறார். 'ஆயிரம் உண்டிங்கு ஜாதி எனில் அந்நியர் வந்திங்கு புகலென்ன நீதி?' என்று பாரதியார் வெகுண்டு கேட்டால், 'வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால் சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும். ஆகவே நாவலந்தீவு நமை விட்டுப்போகாது' என்று ஆங்கிலேயன் எக்களித்ததை எடுத்துக் காட்டுகிறார். 'சாதிக் கொடுமைகள் வேண்டாம் அன்பு தன்னிற் செழித்திடும் வையம்' என்று பாரதியார் உபதேசம் செய்கிறார். பாரதிதாசனோ 'செத்து மடிவதிலும சேர்ந்து பிறப்பதிலும் என்ன பேதங் கண்டாய்?' என்று அடித்துக் கேட்கிறார்.

இரண்டு கவிஞர்களும் சமத்துவம் சகோதரத்வம ஆகிய கொள்கைகளை அப்படியப்படியே ஆதரிக்கின்றனர் 'தொண்டர் எனுமோர் வகுப்பில்லை' 'நிகர் என்று கொட்டு முரசே அந்த நீள்நிலம் வாழ்பவரெல்லாம்;' 'இடங்கொண்டோர் மெலிந்தோரைத் தின்று பிழைத்திடலாமோ?'' 'பாருக்குள்ளே சமத்தன்மை மற்றும் சகோதரத் தன்மை யார்க்கும் தீமை செய்யாது!' இவை பாரதியார் உள்ளம். 'ஏழை தொழிலாளி என்பதில்லாமற் செய்;' 'வாழ்வதிலும் நலம் சூழ்வதிலும், புவிமக்களெல்லாம் ஒப்புடையார்;' 'பொதுவுடைமைக் கொள்கையைத் திக்கெட்டுஞ் சேர்ப்போம்,' 'ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பராகிவிட்டால் ஓர் நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ' - இவை எதுகைக் குவியலல்ல, பாரதிதாசனின் எழுச்சிக் குரல்!

பெண்கள் உலகவளர்ச்சிக்கு முதன்மை யானவர்கள். உலகம் உய்ய அவர் தம் அறிவு வளர வேண்டும். ஆனால் சில மூடர், 'அடுப்பூதும் பெண்கட்குப் படிப்பேனோ?' என்று கூறிப் பெண்களைக் கிணற்றுத் தவளைகளாக்கினர். பாரதியார், 'மண்ணில் சில மூடர் நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார்' என்று கூறினார். 'இற்றைநாள் பெண் கல்வியாலே முன்னேற வேண்டும் வையமேலே' 'ஆணுயர் வென்பதும் பெண்ணுயர் வென்பதும் நீணிலத் தெங்கணும் இல்லை' என்று பாரதிதாசன் சொல்லுகிறார்.

பாரதியார், யாமறிந்த மொழிகளிலே புலவரிலே, தமிழும் தமிழ்ப் புலவர்களுமே உயர்ந்தவர்களென்று கூறிச் சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் மணக்கச் செய்வீர் என்று சொன்னார். பாரதிதா



★



சன் தமிழியக்கத்தின் மூலம் தமிழ் வளர்க்க வேண்டிய ஒவ்வொரு துறையையும் விளக்குகிறார்.

பாரதியாரைச் சமூக வாதி யென்றும், பாரதிதாசனைச் சமூகப் புரட்சிக்காரர் என்றும் குறிப்பிடுவது பொருந்தும். தெய்வீகக் கொள்கையிலும் அப்படித்தான். தெய்வீகக் கொள்கைகளைக் கூறும்போதும் பாரதியார் ஒருமுடிவுக்கு வராமல் குழப்பமடைகிறார்.

காதல் வழிகாட்டிய பாரதியார் கைம்பெண் வாழ வழி வகுக்கவில்லை. ஏழையின் காதல் நிலைக்க வழிகாட்டவில்லை. பாரதிதாசன் கைம்பெண் துயர் போக்கப் படவேண்டியதையும், ஏழைகளும், இன்பமுறக் காதலுக்கு வழி வைத்துப பிள்ளைப் பேற்றைத் தடுக்கும் வழியையும் கூறுகிறார்.

கைம்பெண் மணத்தால் கற்புக்கெடும் என்று ஓலமிடுபவர்கள் 'வாடாத பூப் போன்ற மங்கை நல்லாள் மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ? பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல் பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ?' என்ற பாரதிதாசனின் வரிகளைப் படித்தால் உண்மையில் இளகிப் போய் விடுவார்கள்.

தமிழராகிய பாரதிதாசன் தமிழைச்சிறப்பித்துப் பாடியதைவிட ஆரியராகிய பாரதியார் போற்றிப் பாடியது மிகுந்த சிறப்புடையது. எனினும், 'குலத்தளவே யாகும் குணம்' என்றபடி வாழிய செந்தமிழ் என்று துவங்கியவர் ஆரிய நாட்டினர் முயற்சி வெல்ல வேண்டுமென்று கூறுவதும பின்னொருமுறை 'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே' யென்று பாடுவதும அவர் உள்ளத்தில் தெளிந்த கொள்கையில்லாமையை புலப்படுத்துகின்றன. பாரதியார் மதம் பலவாயினும் வணங்கும் பொருள் ஒன்றே என்று கூறி ஒற்றுமையை வளர்க்கப் பாடுபட்டார். பாரதிதாசனோ நலம் வளர்ப்பின் அது இருக்கட்டும் பேதம் வளர்ப்பின் அழியட்டும என்று முழக்கிக் 'கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே' என்று ஆர்க்கிறார்.

பாரதியாருக்குப் பாஞ்சாலி சபதமும் குயிலும் புகழ் சேர்த்தது போலப் பாரதிதாசனுக்குப் பாண்டியன் பரிசும் புரட்சிக் கவியும் புகழளிக்கின்றன.

பாரதியார் இறந்தார், அவர் புகழ் இறக்கவில்லை, இறந்தவர் ஒரு நீர்த்துளி என்றால் இருக்கும் பாரதிதாசன் பெருவெள்ளம். முன்னவர் சிறுபொறி, பின்னவர் பெருங் கனல். பாரதியார் விடிவெள்ளி என்றால் பாரதிதாசன் இளம் ஞாயிறு! பாரதியார் கருத்தின் வளர்ச்சி பாரதிதாசன். ○

லங்கா தகனம்

மு. மீனாட்சிசுந்தரம்

அன்றுவாணிவிலாசம் தியேட்டரில் பெருங் கூட்டம். பிரபல நடிகை பிரபா நடித்த 'லங்கா தகனம்' என்ற படம் ஓடிககொண்டிருந்ததே அதற்குக் காரணம.

கோபுவின் சிந்தனை படஉலகைப் பற்றி எண்ணமிட்டுக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட பகுத்தறிவுக்கொவ்வாத படங்களும் மக்களைக் கவர்கின்றனவே என்றெல்லாம் நினைத்தான். அவன் நினைத்துப் பயனென்ன? அவனால் என்ன செய்ய முடியும்?

'ஏய் காலை எடய்யா' என்ற குரல் வந்த பக்கத்தில் கை விளக்கின் ஒளியைப் பாய்ச்சி விட்டு அவ்விடம் நோக்கி நடந்தான். அவன்போய்ச் சேருவதற்குள் வார்த்தைகள் தடித்தன. படம் பார்க்க வருபவர்களைத் தக்க இடத்தில் உட்கார வைப்பது தான் கோபுவின் வேலை. சத்தம் போட்டவர் யாரென்று பார்க்கக் கை விளக்கை அவர்பக்கம் திருப்பினான். கைகள் நடுங்கின. அந் நடுக்கத்திற்குக் காரணம் அவர் பக்கத்தில் இருந்த காந்தம் தான்.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு, அமைதியை ஏற்படுத்திவிட்டு அவன் வழக்கமாக நிற்குமிடத்திற்கு வந்தான். படம் ஓடத் தொடங்கியது. அவன் சிந்தனையும உருளத் துவங்கியது.

கல்லூரியில் பயிலும் போது காந்தமும் அவனும் காதலர்கள். பார்க்குகளும் தியேட்டர்களும அவர்கள் பாசத்தை வளர்க்கும் இடங்களாயிருந்தன. காந்தம் கோபுவைக் கவர்ந்து விட்டதாகத் தான் நினைத்திருந்தாள். உண்மையில் அவனும் அவளிடம் உயிராகத் தான் இருந்தான். ஆனால் அவன் பெற்றோர் அவனைக் காந்தத்திடமிருந்து பலவந்தமாகப் பிரித்து விட்டார்கள். படித்துத் தேறிய அவன் கடற்படையில் சேர்ந்து கொண்டான்.

படிக்கும் பொழுதே பெற்றோரை இழந்த காந்தம் ஒரு வழியாகப் படிப்பை முடித்துக் கொண்டு டெலிபோன் 'ஆபரேட்டர்' வேலையில் அமர்ந்தாள்.

ஒருநாள்.

"கிணிங் கிணிங் கிணி கிணி" என்று மணியடித்தது. காந்தம் 'போனை'க் கையில் எடுத்தாள். சிறிது நேரம் சென்றதும் 'சீ! சீ!' என்று முணுமுணுத்தது அவள் வாய்.

"என் பிரதர் இந்த ஆண்களுக்கெல்லாம் அறிவேயில்லையா? 'டைம்பிளீஸ் டைம்பிளீஸ்' என்று உயிரை வாங்குறான்களே?" என்று பக்கத்திலிருந்த ஆபரேட்டரைப் பார்த்துச் சொன்னாள். இதைக்

கவனிக்காதவன் போல 'டைம் பிளீஸ்' என்று அவன் தன் கண்களைச் சிமிட்டினுன்.

இதைக் கண்டு வெறுப் படைந்த அவள் மேலதிகாரி யிடம் 'ரிபோர்ட்' கொடுத்து விட்டு வந்தாள். அடுத்த நாள் காலே மேலதிகாரி அனுப்பி இருந்த உத்தரவைப் பிரித்துப் படித்த அவள் வேலேயை உதறித் தள்ளி விட்டு வந்து விட்டாள். மேலதிகாரி அவ ளுக்கு 'நைட்டியூட்டி' கொடுத் திருந்தார். அதுதான் கார ணம்.

காலச் சக்கரம் ஒரு சுற்றுச் சுற்றியது. காந்தம் இப் பொழுது வெறும் காந்தமல்ல. உண்மையான காந்தம். கண்டோரெல்லாம் வீழும்வண் ணம் கண்வலே வீசும காந்தம்.



சபைத்தலேவர்:- இந்தப் பாகவதரை எதற்கு அழைச்சிட்டு வந்தீங்க?

காரியதரிசி:- நம்ம சங்கிதசபைக் கட்டிடத்தை இடிக்கணும்னு சொன்னிங்களே, அதற்கு இவர் ஒரு கச்சேரி நடத்தினுப் போதும்!

போரிலே வீரத்துடன் போரிட வேண்டிய வீரர்களின் உடலுணர்ச்சிகளைத் தணித்து வீர உணர்வை வளர்ப்பதற் காகச் சேவை செய்கிறது ஒரு சங்கம். அந்த ஒப்பற்ற நாட் டுத் தொண்டாற்றும் சங்கத் தில் காந்தம் ஒருத்தியாகச் சேர்ந்து கொண்டாள்.

ஒரு நாள் துறைமுகத்தில் போர்க் கப்பல் வந்து நின்றது. சங்கம் தன் தொழிலேச் செய் யத் துவங்கியது. அணியணி யாக மாதர்கள் கப்பலுக்குள் புகுந்தனர். வலுவில் வரு வித்துக்கொண்ட புன்னகையு டன் காந்தம் ஒய்யார நடை யிட்டு மேல் தளத்தில் நடந்து சென்ருள். ஒவ்வொரு அறைப் பக்கமும் அவள் கண்கள பாய்ந்துபாய்ந்து மீண்டன. ஒரு அறையில் நிலேகுத்தி நின்றன.

"காந்தம்!" என்று அன் புள்ள குரல் ஒன்று அழைத் தது. அங்கே கோபு நின்றதைப் பார்த்ததும் அவள் உள்ளம் துணுக்குற்றது. வயிற்றைக் கழுவுவதற்காகத் தான் கொண்ட கோலம் அவள் உள் ளத்தை இடித்துக் கொண்டி ருந்தது.

"நான் உன்னே விட்டு விட்டு வந்து விட்டேன் என்ற கோபமா!" என்று கேட்டுக் கொண்டே வந்த கோபு அவள் கையைப் பிடித்து இழுத்துப் போய்க் கட்டிலில் உட்கார வைத்தான்.

"ஏன் காந்தம், நான் இன்று வருவது உனக்கெப்படித் தெரி யும்?"

அவன் கல்லூரியில் கண்ட கோபுவாகவே தோன்றினுன். தாய் தந்தையருக்குக் கட்டுப்

பட்டவனாக இப்பொழுதில்லை. இதை யறிந்தபோது காந்தத்தின் உள்ளம் விம்மிப் பூரித்தது. பெருத்துக்கொண்டே வந்த 'பலூன்' திடீரென்று உடைவதுண்டல்லவா? அது போலத்தான் அப்பொழுதே அவள் இன்ப எண்ணம் சிதறிப் பறந்தது.

"மிஸ்டர் கோபு!" என்று அழைத்தபடி ராமு வந்தான். காந்தம் நடுங்கினாள். கட்டிலை விட்டு இறங்கி ஒருபுறமாக ஒதுங்கினாள்.

"சும்மாயிரு காந்தம், அவன் நண்பன் தான்" என்று நடுங்கிக் கொண்டிருந்த அவளை உட்காரவைத்தான்.

"ஏண்டா கோபு, இவள் எப்படி உன்னைப் பிடித்தாள்?" என்றான் ராமு அலட்சியமாக.

"இவள் என் ஆருயிர்க் காதலி காந்தம். இவளைத்தான் நான் மணந்து கொள்ளப் போகிறேன்" என்றான் கோபு.

"என்னடா, உளறுகிறாய்? இவள் எங்கள் சங்கத்தைச் சேர்ந்தவள். இந்த நாயையா கலியாணம் செய்து கொள்ளப் போறே"

"என்ன ராமு, இவள் உங்கள் சங்கமா?" என்று உளறிவிட்டு "காந்தம்! இது உண்மையா?" என்று கூவினான்.

காந்தம் பேசாதிருந்தாள். அவன் கண்கள் சிவந்தன. கைகளை உயர்த்திக் கொண்டு எழுந்து வந்தான். காந்தம் அதற்குள் அகன்று தப்பினாள்.

சங்கத்திலிருந்து வெளிவந்த காந்தத்திற்கு வாழ்வில் நம்பிக்கையற்றுப் போய்விட்டது. தெருவில் ஒன்றையும் கவனியாமல் நடந்துகொண்டிருந்த அவள் மூர்ச்சையாகி ஓரிடத்தில் வீழ்ந்தாள். அதே சமயம் பிரேக் போட்டபடி ஒரு கார் சருக்கென்று நின்றது. அதிலிருந்து இறங்கிய கனவான் அவளைக் காரில் இட்டுக்கொண்டு சென்று வீட்டில் கொண்டுபோய் மூர்ச்சை தெளிவித்தார். அவள் கூறிய கதையனைத்தையும் கேட்டபின் தன் விருப்பத்தைக்கூறி அவளுக்குத் தன்னை மணந்துகொள்ள விருப்பமுண்டா என்று கேட்டார். இருவரும் அது முதல் கணவன் மனைவி உறவு கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அவரோடுதான் அன்று அவள் 'லங்காதகனம்' பார்க்க வந்திருந்தாள்.

ஒழுங்கின்மை காரணமாகக் கடற்படையிலிருந்து விலகிய கோபு பலநாள் அலைந்த பின்பு கைவிளக்குக் காட்டி இடம் அமர்த்திக்கொடுக்கும் வேலையில் சேர்ந்துகொண்டான்.

படம் முடிந்து வெளியேறும் போது ஒரு ஆர்வம் கலந்த பார்வையை அள்ளிவீசிவிட்டுக் காந்தம் அந்தப் பெரிய மனிதருடன் போனாள்.

வீட்டுக்குப் போனதும் கோபு தன் கதையையே நாடகமாக எழுதத் துவங்கினான்.

"உள்ளத்தை மட்டும் ராமனிடம் வைத்திருந்த சீதையின் கதை மக்களைக் கவரும்போது கோபுவிடம் காதல்கொண்ட உள்ளம் மாறாதிருக்கும் காந்தத்தின் கதையா மக்களைக் கவராது?" என்று அவன் சிந்தனையுள்ளம் அவனைத்தூண்டிவிட்டது.

பேனா, தாள்மேல் ஓடிக்கொண்டிருந்தது. ○



யார் திருடன்?

-அத்தான்-

பூத்தோட்டம் ஒன்றில்
பூங்கொடியின் கொப்பில்
பூத்திருந்த பூவில்
பூந்தேனை வைத்து

யாரேனும் திருடர்
அதை யெடுத்திடாமல்
கூரான முள்ளால்
கொடி, காத்திருந்ததாம்!

பொல்லாத தேனீ
புதுத்தேனைச் சேர்க்க
எல்லோரும் சொக்க
இசைபாடிக் கொண்டு

சீரான பூவில்
சேர்த்ததுவாம் தேனை!
கூரான முள்ளோ
குறுக்கிட்வும் இல்லை!

திருடி வந்த தேனைத்
தேன்கூடு கட்டி
அருமையாக வைத்தே
யாரேனும் திருடர்

வந் தெடுத் திடாமல்
வால் போன்ற கொடுக்கால்
சொந்த மோடு தேனீ
சுற்றிக் காத்து வந்ததாம்!

பாடுபட்டுத் தேடிப்
பதுக்கி வைத்த தேனை




நாடிவந்த மனிதன்
நன்கு கண்டு கொண்டான்!

அக்கணமே மனிதன்
அங்கையில் தேன் ஊற்றி
நக்கி நக்கிப் பார்த்து
'நல்ல இனிப்' பென்றான்!

பொல்லாத மனிதன்
புதுத்தேனைச் சேர்க்கப்
பொல்லாத நெருப்பால்
பொசுக்கிவிட்டான் கூட்டை!

கொடுக் கிருந்தும் ஈக்கள்
கொட்ட முடியாமல்
படுநெருப்பில் வீழ்ந்து
பட்டத நியாயம்!



பரம்பரையின் பெருமை

தற்கொலை செய்து கொண்ட ஒருவர் பையில் ஒருகடிதம் இருந்தது. அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:—

மகாத்மா காந்தி இறந்தார் என்று கேள்விப்பட்டதும் என் தந்தை இறந்தார். புதிய பட்ஜட்டில் கார்டு முக்காலணா, கவர் இரண்டணா என்று கேள்விப்பட்டதும் என் எழுத்தாள அண்ணன் இறந்து விட்டார். நான் படித்திருந்தும் வேலையில்லாத் திண்டாட்டத்தால் செத்துக்கொண்டிருக்க விரும்பவில்லை, செத்து விட்டேன்.

பிரேத விசாரணையில் 'இவர் பரம்பரை வியாதியால் மாண்டார்' என்று முடிவு செய்யப்பட்டது.

வளரும் இலக்கியம்

இன்பத் திராவிடம்

இன்பத்திராவிடம் கிடைத்தது. "அதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் எங்களுக்குத் தெரியாமல் எப்படிக் கிடைத்தது, என்று கிடைத்தது?" என்று கேள்விகளை அடுக்கி விடாதீர்கள். நாரா. நாச்சியப்பன் எழுதிய புத்தகத்தைச் சொல்லுகிறேன். இயக்கம் என்ற பகுதியில் "தீர்ப்புக் கூறு", "நாத்திகர் உலகம்" இரண்டும் நன்று. "வாழ்வது எப்படி?" என்ற பாடல் உணர்ச்சி மிக்க அழகான பாடல். "கோயிலில் நடப்பன" "தரகு வேண்டாம்" என்ற இரண்டும் அழகாக அமைந்திருக்கின்றன. "தமிழ் மறவர்" என்ற பாடல் நூலில் ஒப்பற்று விளங்குகிறது என்பது என் எண்ணம். அதுவும், 'பேச்சை நினைப்பவர் நேர் வந்து பாரீர்' என்ற அருமையான அடி உள்ளத்தில் எக்காளச் சிரிப்பை உண்டாக்குகிறது. விலை 4 அணா. எரிமலைப் பதிப்பகம், துறையூர், திருச்சி.

—இராம. வே. சேதுராமன்.

கடலின்கண்முத்து அல்லது யான்கண்ட இலங்கை

இது ஒரு பயண நூல். இதன் ஆசிரியர் சி. எம். இராமச் சந்திரன் செட்டியார், மும் முறை இலங்கை சென்ற அனுபவத்தில் இதை எழுதத் துவங்கியிருக்கிறார். முதலில் சென்று வந்த ஒருவர் அதற்குப் போகும் முறைகளை அடுக்கடுக்காய்த் தொகுத்துச் சொல்வதுபோல அழகிய தமிழில் நூலை எழுதியிருக்கிறார். புகைவண்டி போகும் வேகம், அவ்வந் நிலையங்களின் சிறப்பு, ஆங்காங்கு நடைபெறும் தொழில்கள் பிறபற்றியெல்லாம், விரிவாகத் தெளிவான முறையில் கூறுகிறார். வெறும் விவரமாக மட்டும் இல்லாமல் தாம் சென்ற போது நடந்த சிறுசிறு நிகழ்ச்சிகளையும் ஆசிரியர் கூறிவருவது இலக்கியச் சுவையுடன் மிளிர்கிறது. முத்துக்கு ஓர் இணைப்பு என்று சேது அணையையும், முத்தின் தலையில் ஒரு குத்து என்று யாழ்ப்பாணத்தையும், தரைப் படத்தின் தோற்றத்தைக் கொண்டு இட்டிருக்கும் தலைப்புக்கள் புதிய முறையில் அமைந்து சுவை பயக்கின்றன.

இலங்கை செல்லுவோர் செல்லுமுன் இப்புத்தகத்தை ஒரு முறை படித்துவிட்டுச் செல்வார்களானால், பயணத்திற்கிடையில் சுணக்கம் இன்றி விரைவில் முடிக்கப் பயன் படும். விலை ரூ 3–8–0 கலிக்கா விலை 4–8–0 தி. தெ


ஸைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிடெட், 6,பவழக் காரத் தெரு, சென்னை 1

தமிழ் கற்பிக்கும் முறை

தமிழாசிரியர்களுக்குப் பயன்படும் பல கருத்துக்களைத் திரு. த. பு சந்தான கிருஷ்ணன தொகுத்தளித்துள்ளார். இதுவரை எள்ளி நகையாடுதற்குரிய பிறவிகளாகக் கருதப் பட்டு வந்த தமிழாசிரியர்கள், மொழிப் பற்று வளர்ந்து வரும் இந் நாளில் அங்கிலைக்குத் தகத் தங்களைத் தகுதியாக்கிக் கொள்ள இந்நூற் கருத்துக்கள் பயன் படும். ஆழப்படித்தல், அகலப்படித்தல், கண்ணோட்டப்படிப்பு முதலிய புதிய சொற்கள் நன்கு அமைந்துள்ளன. கடிதம், கட்டுரைகள் பற்றிய விவரங்கள், திருத்தும் முறைகள், தமிழாசிரியர்க்குள்ள தொல்லைகள்,அவற்றை விர்க்கும் முறைகள், முதலிய பலவும் கூறுகின்றார். இலக்கிய நுகர்ச்சி உண்டாவதற்கு மொழிச்சுவை அமைதல் இன்றியமையாதது. ஆகலின் தமிழாசிரியர்கள் தமிழென்றால் இலக்கணம் என்று மாணவர்கள் மூளையைக் கலக்காமல் மொழியின் அருமை நெஞ்சிற் படியும் படி சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று கூறுங் கொள்கையை ஆசிரியர்கள் கடைப்பிடிக்க வேண்டும். விலை ரூ 1–8–0 சைவசித்தாந்த நூற்பதிப் பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை. 1

மாஸ்கோ பாதை

இந்நூல் படித்தவுடன் யாரும் இதில் கூறியுள்ள ஒவ்வொன்றையும் அப்படியே நம்பும் முறையில் திறமையுடன் எழுதப் பெற்றுள்ளது. லெனின் கொள்கைப்படி ஸ்டாலின் நடக்கவில்லை. ஸ்டாலின் ஆட்சி மறைமுகமாகப் பயங்கரக் கொலைகள் நடத்தும் அதிகார ஆட்சி. விவசாயிகளுக்கு உருளைக் கிழங்கு போன்றவை தாம் உணவு, ஆண்டுக்கு மூன்றுநாள்தான் இறைச்சி கிடைக்கும் என்றெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது. அண்மையில் வெளிவந்த செய்தியொன்று இதற்கு மாறாக, வரும் மாதத்திலிருந்து ரஷியாவில் எந்த ஓட்டலிலும் விலையின்றி ரொட்டி கிடைக்குமென்று கூறுகிறது. அறிஞர் பெர்னட்ஷா அண்மையில் கூறிய கருத்தொன்று, மக்கள் கையில்தான் ஸ்டாலின் பதவியிருக்கிற தென்பதைப் புலப்படுத்துகிறது. இவ்வேறுபாடுகளைக் கொண்டு இப்புத்தகம் மாஸ்கோவிற்கு எதிர்ப்பிரசாரம் செய்யும் ஒரே நோக்கத்



துடன் எழுதப்பெற்றுள்ள தென்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஆசிரியர் டி. என். இராமச்சந்திரன். விலை ரூ 1—8—0 வெளியிட்டோர்: தோ. ந. வீரராகவன். இமயப் பதிப்பகம் நாகபட்டினம்.

தலைவர் காமராஜ்

இன்று தமிழ்நாட்டில் ஒவ்வொருவர் நினைவிலும் இருக்கும் காங்கிரஸ் தலைவர் காமராஜ் அவர்கள் நாற்காலியில் அமர்ந்திருக்கும் தோற்றத்தை அட்டைப்படமாக்கி, அவரைப் பற்றி எழுதியுள்ள பல அறிஞர்களின் கருத்துரைகளைத் தொகுத்து அழகுற வெளியிட்டுள்ளனர், விருதுநகர் சதானந்தா புத்தக நிலையத்தினர். உரிமைபெற்ற இந்தியாவின் முதல் நிதியமைச்சர் சண்முகஞ் செட்டியாரின் முன்னுரையுடன், அமைச்சர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், தலைவர்கள், கவிஞர்கள் முதலியோரின் கருத்துக்கள் அடங்கியுள்ளன. திரு. யோகி சுத்தானந்த பாரதியார் என்பவர் காமராஜருக்கும் தனக்குமுள்ள தொடர்பைக் கூறும்போது தம் பெருமைகளையே வளர்த்து வளர்த்துக் கூறி வருவது பொருத்தமில்லை. காமராஜர் வாழ்க்கை வரலாறும் இணைத்துள்ளனர். விலை ரூ2—8—0 சதானந்தா புத்தக நிலையம், விருதுநகர்.



ஜோசியர்:- உங்க ஜாதகம் ரொம்ப க்கைராசி உள்ளதுங்க.

வந்தவர்:- இதுவரைக்கும் பார்த்தவங்க எல்லாம் எனக்குப் போதாத காலம்னுங்க —நீங்க.........

ஜோசியர்:- அப்படியில்லே! இன்னைக்கு முதல்லே உங்க ஜாதகத்தைத்தான் பார்த்தேன், வழக்கமாக வர்ரதைப் போல நாலுபங்கு வரும்படி கிடைச்சதுங்க!

சூறுவளி

இன்று மேடையில் நடிக்கப்பட்டுவரும் நாடகம் இது. செல்வர்கள், மடாதிபதிகளின் சீர்குலைந்த செய்கைகள், அரசியற் சூழ்ச்சி முதலியவற்றை விளக்கிக்காட்டுகிறது. மடமை மாயப் போராடும், எரிமலை ஆசிரியர் தோழர் ஏ. கே. வேலன் இதன் ஆசிரியர். நாடகத்திற்கேற்ற முறையில் உரையாடல்கள் சுருக்கமாகவும், கருத்துச் செறிவுடனும் அமைந்துள்ளன. படிக்கச்சுவையான இந்நூலின் விலை ரூ. 1–0–0. செந்தமிழ்ப் பாசறை கரந்தை, தஞ்சாவூர்.

— நா. வேந்தரசன்.

மாணவர் மன்றம்

கேள்வி 3 விடைகள்

ஏ. எம். இராமனாதன்
VI படிவம்
நாட்டு உயர்நிலைப்பள்ளி, மன்னார்குடி
(பரிசுபெற்றவர்)

ஒரு நாடு தனது உயர்ந்த நாகரிகத்தினின்றும், உயர்ந்த மொழியினின்றும் வழுவி நலிவு பெற்று, நல்லவர் சிலரால் நல்லுணர்ச்சி பெற்று மீண்டும் தனது பழைய நாகரிகத்தை ஒத்த உயர்ந்த நிலைக்கு ஓங்குவது அந்த நாட்டின் மறுமலர்ச்சி எனப்படும். இதுபோன்ற மாறுதல் ஒவ்வொரு செயலிலும் ஏற்படும். 'காலத்தின் முற்போக்கிற்கேற்பத் தங்களுடைய கருத்தை மாற்றிக்கொண்டு, உலகின்கண் சீரிய வாழ்க்கை நடத்த வேண்டும்' என்ற கருத்துத்தான் மறுமலர்ச்சியின் உட்கிடக்கை. மக்கள் மனம் மாற்றமடையும் போதுதான் மறுமலர்ச்சி ஏற்படும்.

○●○

டி. என். சி. சண்முகசுந்தரம்
IV படிவம்
அர்ச் மரியன்னை உயர்நிலைப்பள்ளி
மதுரை

பழையன கழிந்து புதியன தோன்றும்போது — காலத்திற்கேற்பக் கருத்தினை மாற்றிக்கொள்ளும் போது — மறுமலர்ச்சி தோன்றுகிறது. அறிவாட்சியின் நேர்மையும் நீதியும் கொண்டு வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வழிகோலும்போது அங்கு மறுமலர்ச்சி தோன்றுகிறது. வைதிகர்களுக்கு, பழமை விரும்பிகளுக்கு, ஆண்டான் அடிமை எனும் பேதத்தை வளர்ப்பவர்களுக்கு எவையெல்லாம் புதிதாகத் தோன்றி வெறுப்பூட்டுகின்றனவோ — அவையெல்லாம் மறுமலர்ச்சியாம்.

○●○

அ. இராமகிருஷ்ணன்
VI படிவம்
சேதுபதி உயர்நிலைப்பள்ளி, மதுரை.

வளர்ந்த செடி, வாடினால் மீண்டும் துளிர்க்கச் செய்வது போல ஒளி வீசிய கலம், வண்ணம் இழந்த நிலை போக்க மெருகு தீட்டுவது போல, வளமாக வாழ்ந்து இடைக்காலத்தில் வாழ்விழந்து, உணர்ச்சியற்று உருக்குலைந்து சீரழிந்த சமுதாயத்தை மறுபடியும் சீராக உருவாக்கிப் புத்துணர்வு ஊட்டிப் புதுவாழ்வு அளிப்பதுதான் மறுமலர்ச்சி.

○●○

ச. நாகராஜன்
முதல் ஆண்டு, அரசர் கல்லூரி
திருவையாறு

இரவில் குவிந்த தாமரை பகலில் மீண்டும் மலர்வது தாமரையின் மறுமலர்ச்சி. அது போல் ஓரினமக்களை மூடப்பழக்க வழக்கம் என்னும் நச்சுக்கொள்கை முற்றுகை இடுவதாலும், அயலார் அடிமைப் படுத்துவதாலும், வறுமை வாட்டுவதாலும் ஏற்படும் இழிவுகளையும் இன்னல்களையும் போக்கி உலகியல், பொருளியல், அரசியல் ஆகிய மூவியல்களிலும் விடுதலையும் விழிப்புணர்ச்சியும் ஏற்படுத்துவதுதான் மறுமலர்ச்சி எனப்படும்.

இரா. இராமலிங்கம்
II படிவம்
இந்து உயர்நிலைப்பள்ளி, சென்னை

ரோஜாச் செடியில் ரோஜா மலர்வது இயற்கை. மறுநாளே வாடுவதும் இயற்கை. மீண்டும் செடி மலர்வதும் இயற்கை. அதே போல் சமுதாயத்தில் சட்டங்கள் மலர்வதும் அழிவதும் இயல்பு.

அவ்வப்போது பகுத்தறிவுக்கொப்ப மாறி மாறிக் காலத்திற்கேற்ற சட்டங்களாக்குவதே மறுமலர்ச்சி எனப்படும்.

○●○

ர. சண்முகம் V படிவம்
அர்ச் சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி
பெங்களூர்.

மக்கள் அறியாமையினின்றும், அடிமையிலிருந்தும், சுரண்டலிலிருந்தும் மீட்கப்பட்டு அறிவு, சுதந்திரம், சுகம் ஆகியவைகளை அடைய நடத்திய பிரஞ்சுப் புரட்சியையும், ரஷ்யப் புரட்சியையும் மறுமலர்ச்சி என்னலாம். காலத்துக்கு ஏற்றதாக, கவைக்கு உதவுவதாகப் பயன் தரத்தக்கதாக, நடைமுறைக்கு ஏற்றதான கருத்துக்களைப் பரப்பிய ரூஸோ, வால்டேர் மார்க்ஸ் முதலியவர்களின் செயல்களை மறுமலர்ச்சி எனக்கொள்ளலாம். பொதுப்படை நோக்கிலே அழுக்கடைந்த அமைப்புக்களைச் சீர் செய்வக, திரிந்துபோன முறைகளைத் திருத்தி அமைப்பது, பாசி படர்ந்த இடத்தைத் தூய்மையாக்குவது, தேய்ந்த தத்துவங்களுக்கு எரு ஊட்டுவது, குனிந்த உள்ளத்தை நிமிர்த்துவது, கூனிப்போன கொள்கையைச் சரி செய்வது, இழந்த இன்பத்தைத் தேடுவது போன்ற ஆக்க வேலைகளே மறுமலர்ச்சி எனக் கொள்ளல் சால்புடைத்து.

○●○

[கீழ்க்கண்ட விடையை நாமக்கல் மாணவர் இருவர் சில சில சொற்களை மாற்றி எழுதியனுப்பியிருக்கிறார்கள். இது நேர்மையன்று. இனி இவ்விதம் நிகழாதென எண்ணுகிறோம்.]

அழுக்கடைந்த அமைப்புக்களைச் சீர் செய்வது. திரிந்துபோன முறைகளைத் திருத்தி அமைப்பது. பாசிபடிந்த இடத்தைத் தூய்மைப் படுத்துவது. தேய்ந்த தத்துவங்களுக்கு உரம் ஊட்டுவது. இழந்த இன்பத்தைத் தேடுவது. இது தான் மறுமலர்ச்சி.

-- இங்கே கத்தரிக்க --

கேள்வி எண் 4.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்களுக்குத் தேர்வு வைப்பது தேவையா?

— பு. பாரத்செயபால், VI படிவம் —
ஒற்றுமை உயர்நிலைப் பள்ளி, கோயமுத்தூர்

விடைகள் கூபனோடுதான் அனுப்ப வேண்டும். அத்துடன் மூன்று புதிய கேள்விகளும் எழுதியனுப்ப வேண்டும். நூலஞ்சலில் அனுப்பினால் போதும். விடை 50 சொற்களில் அடங்குதல் வேண்டும்.	பெயர்..
	வகுப்பு.................வயது..........
	பள்ளி ....
முடிவு நாள் 20—4—49	ஊர்..
	தேதி.................கையெழுத்து